சென்னைச் சிலைகளின் கதை

கழக வெளியீடு

WX
N70
111902

சென்னைச் சிலைகளின் கதை

கழக வெளியீடு : கசOஉ

சென்னைச் சிலைகளின் கதை

★

ஆசிரியர் :

திரு என் கே வேலன், பி.ஏ.

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1970

நமசிவாய பிள்ளை குழந்தை வேலன் (1907)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

*

Ed 1 November 1970

ND 44111, N1
N70

குழந்தைகள் நாள்விழா வெளியீடு
(14—11—1970)

SENNAICH CHILAIKALIN KATHAI

Appar Achakam, Madras-1. (1/6)

பதிப்புரை

சென்னை மாநகரிலுள்ள சிலைகளை மட்டுமே குறிப்பிடுவதால் இந்நூலுக்குச் 'சென்னைச் சிலைகளின் கதை' எனத் தலைப்பிடப்பட்டது. இதன் கண் புகழ்பூத்த நாற்பத்தைந்து பெருமக்களின் வரலாற்றுக் குறிப்புக்களைக் காணலாம்.

பொதுவாக மறைந்த பெருமக்கட்கே சிலை வைப்பது வழக்கம். எனினும் ஒரு சிலருக்குச் சிறப்பாக அவர்கள் வாழுங் காலத்திலேயே சிலை வைக்கப் பெறுகின்றது. அம்முறையில் நாட்டு விடுதலைக்குழைத்த திரு காமராசர்க்கும், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகப் பல ஆண்டுகள் அமர்ந்து கல்வி வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்த டாக்டர் திரு இலக்குமணசாமி முதலியார்க்கும் சிலை நிறுவப்பட்டது. அதே போல் பேரறிஞர் அண்ணா தமிழக முதலமைச்சராக இருந்தபோதே அவர்கட்கும் சிலை வைக்கப்பெற்றது.

இம் மூவரைத் தவிர ஏனைய நாற்பத்திருவரில் 1968 ஆம் ஆண்டு சனவரி 2 ஆம் நாள் 'இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு' சென்னையிலே நடைபெற்றபோது தமிழ்த் தொண்டு புரிந்த மேனாட்டறிஞர் வீரமாமுனிவர், டாக்டர் போப், டாக்டர் கால்டுவெல் ஆகிய மூவர்க்கும், உலகப் பொதுமறை அருளிய திருவள்ளுவர்க்கும், தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார்க்கும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பருக்கும், தமிழ் மக்கட்கு வீரவுணர்ச்சி யூட்டிய சிதம்பரனார், பாரதியார், பாரதிதாசன் ஆகிய மூவர்க்கும், சிலப்பதிகாரச் செந்தமிழ்க் காப்பியத் தலைவியாகிய கண்ணகிக்கும் சிலைகள் வைக்கப்பெற்றன.

பண்டைச் செந்தமிழ் இலக்கியங்களைத் தேடித் தொகுத்துப் பதிப்பித்த தமிழ்த் தாத்தா, டாக்டர் சாமிநாதையர்க்கும், வடகலையல பல கலையொடு தமிழை வளர்க்கும்பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவியதோடு தமிழ் இசை வளர்ச்சியின் பொருட்டுத் தமிழிசைச் சங்கம் நிறுவிய இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கும், பேச்சாலும்

எழுத்தாலும் தமிழுணர்ச்சி யூட்டிய திரு வி. கலியாண சுந்தரனர்க்கும், சீவானந்தர்க்கும் முன்னமேயே சிலைகள் வைக்கப்பெற்றமை மிகவும் போற்றுதற் குரியது.

ஈத்துவக்கும் இன்பத்திலே திளைத்து மக்கள் உள்ளத்தைக் கவர்ந்த நகைச்சுவை நடிகர் என். எஸ். கிருட்டிணன் சிலையை 14-1-1969 இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்து உணர்ச்சி ததும்பத் தமிழில் பேசியபேச்சே கடைசிப் பேச்சு என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இச் சிலையே சென்னையில் கடைசியாக வைக்கப் பெற் றதுமாகும்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு ஊர் வலத்திலே ஊர்தி வண்டிகளில் காட்சியளித்த பெரும் புலவர்களில் மறைந்த தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார்க்கு மட்டும் சென்னை மாநகரிலே ஏன் சிலை வைக்கப் பெறவில்லை என்ற குறை கற்றவர் நாவில் நவிலப்படுகின்றது. ஆனல் அக்குறை விரைவிலே நீங்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

சென்னையிலுள்ள நாற்பத்தைந்து பேர் சிலை களில் திருவள்ளுவர், ஔவையார், அன்னி பெசன்ட், திரு வி. க. ஆகிய நால்வர்க்கும் இரண்டு இடங்களிலும், ஐந்தாம் ஜார்ஜ் அரசர்க்கு மூன்றி டங்களிலும், அறிஞர் அண்ணாவிற்கு ஐந்து இடங் களிலும் சிலைகள் வைக்கப் பெற்றிருக்கின்றன.

சென்னையிலிருப்பவர்க்கே எத்தனை சிலைகள், யார் யாருக்கு, எங்கெங்கே இருக்கின்றன என்பதும், எதன் பொருட்டு, யாரால், எப்போது அச்சிலைகள் வைக்கப் பெற்றன என்பதும் தெரியாது. அவர் களும் வெளியூர்களிலிருந்தும் வெளிநாடுகளி லிருந்தும் வருபவர்களும் சிலைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இக் கதை நூல் நன்கு பயன்படும்.

இத்தகையதொரு நூலை வெளியிட வேண்டு மென்று கருதி ஓராண்டுக்கு முன்பே சென்னையி லுள்ள சிலைகளைப் படம் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சிலைகளாக நிற்கும் புகழ்பூத்த பெருமக்களில் முப்பதின்மர் வரலாறுகளைக் கழகப் புலவர் திரு சு. அ. இராமசாமிப் புலவர் எழுதித் தந்தனர்.

நேரு பிறந்த நாளாகிய நவம்பர் 14 ஆம் நாளில் சிலைகளைப் பற்றிய நூலை வெளியிட வேண்டுமென்று கருதப்பட்டது. நீண்ட காலமாகச் சிறுவர்கட்குப் பல அரிய நூல்களை எழுதியுதவிய திருவாளர் என். கே. வேலன் அவர்களை அழைத்துக் கொண்டு போய்ச் சிலைகளையெல்லாங் காட்டிக் குறிப்பு எடுக்கப்பட்டது. அன்றே அவர்கள் சிலைகளின் கதைகளை எழுதத் தொடங்கிவிட்டார்கள். மறைமலையடிகள் நூல் நிலையத்தின் நூலகர் திரு இரா. முத்துக்குமாரசாமி (எம் ஏ., பி. லிப்) அவர்கள் அரிதின் முயன்று சிலைகளைப்பற்றிய வரலாறுகளையெல்லாம் தொகுத்துக் கொடுத்தார். படப்பிடிப்பில் திறனுளரானமையினல் பெரும்பான்மையான சிலைகளை அவர்களே நேரிற் சென்று படம் எடுத்தார்கள். மேலும் சில படங்களைத் தமிழக அரசு செய்தி விளம்பரத்துறையினரும் பாஸ்கர் புகைப்பட நிலையத்தினரும் எடுத்தளித்து உதவினர்.

குறுகிய காலத்திலே சிலைகளின் கதைகளை உரையாடல் முறையிலே சிறுவர்கட்கு மகிழ்ச்சியூட்டும் வகையிலே இந்நூலை எழுதித்தந்த திருவாளர் என். கே. வேலன் அவர்கட்கும் முப்பதின்மர் வரலாறுகளை முதற்கண் எழுதித்தந்த திரு சு. அ. இராமசாமிப் புலவரவர்கட்கும் கழகத்தார் நன்றி உரித்தாகின்றது. இந் நூலுக்கு அணிந்துரை எழுதியருளிய தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு, நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்கட்கு யாம் நன்றி கடப்பாடுடையோம்.

பெருமக்களின் சிலைகள் நாட்டு வரலாற்றுச் சின்னங்களாகும். சிற்பக்கலைத்திறனை அறிந்து இன்புறுதற்கும் அக்கலை மேலும் வளர்ச்சியுறுவதற்கும் இங்ஙனம் சிலைகள் அமைப்பது போற்றுதற்குரியதாகும். சிலைகளில் நிற்கும் புகழுடைப் பெருமக்களைப் போல் தாமும் ஆதல் வேண்டுமென்ற ஊக்க உணர்ச்சியைச் சிறுவர்கட்கு ஊட்டும் என்பதும் இந்நூலை வெளியிடுவதன் முதன்மையான நோக்கமாகும்.

சென்னை-1
7-11-1970 } சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அணிந்துரை

(மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள்)

தமிழகக் கல்வி-பொதுநலத்துறை அமைச்சர்



'சென்னைச் சிலைகளின் கதை' என்னும் சீரிய நூலைச் சிறிய அளவில் வெளிக் கொண்டுவந்துள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரை நான் மிகவும் பாராட்டுகிறேன். சிறுவர்—சிறுமியர் கூட எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் இனிய எளிய தமிழ் நடையில் சிலைகளின் வரலாற்றை விளக்கிக் காட்டியிருப்பது, அதுவும் உரையாடல் முறையில் தெளிவுபடுத்துவது இந் நூலைப் பயிலும் ஒவ்வொருவருக்கும் பெருமகிழ்ச்சியை ஊட்டும் என்பதில் ஐயமில்லை. சீரிய முறையில் நூலை உருவாக்கித் தந்துள்ள திரு. என். கே. வேலன் அவர்கள் பாராட்டுதலுக்குரியவர்.

ஆங்காங்குக் காணப்படும் சீரியோரின் சிலைகள் ஒரு நகரின் அழகைப் பெருக்குகின்றன என்பது மட்டுமல்லாமல், அந்த நகரின்—அந்த நகர் அமைந்துள்ள நாட்டின் பெருமையையும், புகழையும் புலப்படுத்துவதாகவும் இருக்கின்றன. மேலை நாடுகளிலும், வளர்ச்சியுற்ற பிற நாடுகளிலும் பொது இடங்களில் ஏராளமான சிலைகள் அழகுக்காகவும், பெருமைக்காகவும், புகழுக்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழகத்திற்கு ஏற்றத்தையும், எழிலையும், புகழையும் தேடித் தந்த நாற்பத்தைந்து பெருமக்களின் சிலைகளின் வரலாற்றைத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு அறிமுகப்படுத்தும் செயல் உவகையோடு வரவேற்கத்தக்கதாகும்.

சிறியோரும் பெரியோரும் இந்நூலைப் படித்து, மகிழ்ந்து பயன்பெறுவார்களாக!

உள்ளுறை

		பக்கம்
	சிலைச் செல்வம்	1
க.	காந்தி அடிகள்	2
உ.	வீரமாமுனிவர்	5
ங.	ஔவையார்	7
ச	பாரதிதாசன்	10
ரு.	விவேகானந்தர்	12
சு.	அன்னிபெசன்ட் அம்மையார்	15
எ.	போப் ஐயர்	17
அ.	திருவள்ளுவர்	19
கூ.	கண்ணகி	22
க0.	உ. வே. சாமிநாத ஐயர்	24
கக.	சுப்பிரமணிய பாரதியார்	26
கஉ.	கம்பர்	29
கங.	கால்டுவெல்	31
கச.	விக்டோரியா அரசி	33
கரு.	கோபாலகிருஷ்ண கோகலே	35
கசு.	சுப்பிரமணிய ஐயர்	37
கஎ.	கிருஷ்ணசாமி ஐயர்	39
கஅ.	இலக்குமணசாமி முதலியார்	41
ககூ.	பிரகாசம்	43
உ0.	அண்ணாமலைச் செட்டியார்	45
உக.	திருவாங்கூர் அரசர் இராம வர்மா	47
உஉ.	ஐந்தாம் ஜார்ஜ்	49
உங.	முத்துச்சாமி ஐயர்	50
உச.	பாஷியம் ஐயங்கார்	52
உரு.	டாக்டர் வில்லியம் மில்லர்	54
உசு.	வ. உ. சிதம்பரனார்	56
உஎ.	சிவானந்தம்	59
உஅ.	திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	62
உகூ.	செங்கல்வராய நாயக்கர்	65
ங0.	பச்சையப்ப முதலியார்	67
ஙக.	லார்டு ரிப்பன்	69
ஙஉ.	சிவஞான முதலியார்	71
ஙங.	தியாகராயச் செட்டியார்	73
ஙச.	சத்திய மூர்த்தி	75
ஙரு.	டாக்டர் அம்பேத்கார்	77
ஙசு.	டாக்டர் அரங்காச்சாரி	79
ஙஎ.	டாக்டர் குருசாமி முதலியார்	81
ஙஅ.	சர் தாமஸ் மன்றோ	83
ஙகூ.	காமராசர்	85
ச0.	ஏழாம் எட்வர்டு	87
சக.	லார்டு போதாம்	88
சஉ.	அறிஞர் அண்ணாதுரை	89
சங.	சிதம்பரம் செட்டியார்	92
சச.	என். எஸ். கிருஷ்ணன்	93
சரு.	பனகல் அரசர்	96

வாழ்த்துரை

உலகோர் உய்ய உருவம் உருஅருவம்
நிலவும் அருவம் மூன்றும் இல்லா
முனிவர் வணங்கும் முக்கட் செல்வர்
தனியருள் அதனால் தானே ஊரும்
பேரும் இல்லாப் பெருநிலை நீங்கி
இன்பம் பொருளறம் இயற்று விப்பான்
கொள்ளுந் திருவுரு கோயிலிற் காண்பம்
தெருக்கள் தோறும் சிலைசிலை யாகத்
தோன்றும் பெருமைத் தொகைநாற்பா னைந்தும்
காந்தி யடிகள் கவின்சிலை முதலா
பனகல் அரசர் பண்பமை சிலையும்
உருவப் படத்துடன் ஒளிமிகு மன்னர்
ஆற்றிய தொண்டும் அடைவுபடப் பொறித்துச்
"சென்னைச் சிலைகளின் கதை"யெனப் பெயரிய
இந்நூல் கற்பார் தமக்குக் களிப்பும்
ஊக்கமும் ஆக்கமும் உதவி
வளமுறச் செய்யும் வாழ்கநற் றமிழே.

குழந்தைகள் நாள்

வெளியீடு

1970

நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் இந்திய வரலாற்றில் சிறப்பு மிக்க நாள். அந்நாள் பண்டித சவகர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள். குழந்தைகளிடத்தில் அளவு கடந்த அன்புகாட்டியவர் நேரு அவர்கள். இன்றைய குழந்தைகள் வருங்காலப் பெருமக்களாவர்—நாட்டின் எதிர்காலம் அவர்களிடமேயுள்ளது என்பதை உணர்ந்தவர் நேரு. எனவேதான் அவர் பிறந்த நாள் 'குழந்தைகள் நாளா'கக் கொண்டாடப்படுகிறது.

அந்நாளில் குழந்தைகட்கென ஆற்றக்கூடிய அரும்பணி ஒன்று உண்டெனில், அஃது அவர்தம் அறிவுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் குழந்தை இலக்கியங்களை வெளியிடும் பணியேயாகும். இப்பணியின் சிறப்பினை உணர்ந்து குழந்தை இலக்கியங்களைத் தொடர்பாக வெளியிட்டு வரும் குழந்தை எழுத்தாளர் சங்கம் பாராட்டிற்குரியது-போற்றற்குரியது.

கழகமும் தன்னுடைய பங்கை நிறைவேற்றும் வகையில் இந்நூலை வெளியிடுகின்றது.

சென்னைச் சிலைகளின் கதை

சிலைச் செல்வம்:

விடுமுறையில் முருகனும் செல்வியும் சென்னைக்கு வந்திருந்தனர். 'சிலைகளை எல்லாம் சுற்றிப் பார்க்கலாம்' என்றான் முருகன்.

'நானும் வருகிறேன்' என்றாள் செல்வி. இருவரையும் மாமா சென்னைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார்.

முருகன் : கோவில் சிலைகளைப் பார்த்திருக்கிறேன். பாதையில் வைக்கும் சிலைகளைப் பார்த்ததில்லை.

மாமா : தெய்வங்களுக்கு உருவம் அமைத்து வழிபாடு செய்யும் பழக்கம் நெடுங்காலமாகவே நம் நாட்டில் இருந்து வருகின்றது. அக்காலத்தில் தெய்வங்களுக்கு மட்டும் உருவங்கள் அமைக்கப் பட்டு வந்தன. சிலப்பதிகாரக் காலத்தில் சேரன் செங்குட்டுவன் இமயமலையிலிருந்து கல் கொண்டு வந்து கண்ணகிக்குச் சிலையமைத்தான். கண்ணகி காலம் தொட்டுச் சிலையமைக்கும் பழக்கம் நாடெங்கும் பரவியது.

செல்வி : கண்ணகியின் சிலையைப் பார்க்கலாமா?

மாமா : முதலில் காந்தி அடிகளின் சிலையைப் பார்க்கலாம்.

முருகன் : மனிதர்களுக்கு எதற்காகச் சிலை அமைக்கிறார்கள்?

மாமா : நற்செயல்கள் புரிந்து புகழ்பெற்றவர்களுக்குச் சிலையமைத்துப் பாராட்டுவது நமது கடமையாகும். இதனைக் கருதியே திருவள்ளுவரும் "நன்றி மறப்பது நன்றன்று" எனக் கூறியுள்ளார்.

காந்தி அடிகள்

மூவரும் பேசிக்கொண்டே காந்தி அடிகளின சிலைக் கருகில் வந்தனர். அது மெரினுக் கடற்கரையில் காவல்துறை தலைமையகத்திற்கு எதிரில் அமைக்கப்பட் டுள்ளது.

செல்வி : மிகவும் அழகான சிலை. காந்தித் தாத்தா கோலூன்றி நடந்து செல்வதுபோல் செய்யப்பட்டிருக் கின்றது.

மாமா : காந்தி அடிகள் உலகப் புகழ் பெற்றவர், அவ ருடைய சிலைகள் இலண்டன், பாரிசு முதலிய இடங் களில் வைக்கப்பட்டுள்ளன. அவருடைய கொள்கைகள் உலகமெங்கனும் பரவியுள்ளன.

செல்வி : காந்தித் தாத்தா கதையைச் சொல்லுங்கள் மாமா.

மாமா : உலகம் போற்றும் உத்தமர், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். இப்பெரியார் போர்பந்தர் என்னும் ஊரில் 1869ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம்

நாள் தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் காபா காந்தி, தாயார் பெயர் புத்தலிபாய். காந்தியடிகட்கு இடப்பட்ட பிள்ளைப் பெயர் 'மோகன தாஸ் கரம் சந்த் காந்தி' என்பது.

காந்தி அடிகள் கல்வி கற்று முடிந்த பிறகு இங்கிலாந்துக்குச் சென்று 'பாரிஸ்டர்' என்னும் வழக்கறிஞர் தேர்வுக்குப் படித்து வெற்றி பெற்றார். பின்னர்த் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று அங்குள்ள இந்தியர்களின் நன்மைக்காகப் பாடுபட்டார். பிறகு இந்திய நாட்டிற்குத் திரும்பி வந்து விடுதலைப் போராட்டங்கள் நடத்தினர். பல முறை சிறை சென்று துன்பப்பட்டார். தீண்டாமை, சாதி வேற்றுமை முதலியவற்றை ஒதுக்கப் பெருமுயற்சி செய்தார். அரும்பாடுபட்டு 1947ஆம் ஆண்டு நமது நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தார். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக ஓயாது உழைத்தார். 1948ஆம் ஆண்டில் மதவெறி பிடித்த கொடியவன் ஒருவன் காந்தி அடிகளைத் துப்பாக்கியால் சுட்டான். அடிகள் "ராம், ராம்" என்று கூறிக்கொண்டே இறைவன் திருவடி சேர்ந்தார்.

செல்வி : ஐயோ பாவம். நாட்டிற்காகத் தமது உயிரையே கொடுத்திருக்கிறார்.

மாமா : ஆம், அவர் மிகவும் நல்லவர். நாம் அவரை என்றும் மறக்க முடியாது. இவர் இந்திய மக்களுக்குச் செய்த நன்மையின் பொருட்டு இவருக்கு எல்லா ஊர்களிலும் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவரது வரலாற்றினைச் 'சத்திய சோதனை' என்ற நூலில் காணலாம். காந்தி அடிகள் மனத் தூய்மையும் அன்பும் உடையவர். எம்மதமும் சம்மதம் என்று பைபிள், குரான், பகவத்கீதை மூன்றையும் படித்து வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்துவார்.

முருகன் : காந்தி அடிகள் மக்களுக்கு என்ன அறிவுரை வழங்கினர் ?

மாமா : இறைவனிடம் இடைவிடாது அன்பு செலுத்த வேண்டும். உடலுக்கு எவ்வாறு உணவு முதன்மையானதோ அவ்வாறே ஆன்மாவுக்கு வழிபாடு முதன்மையானது.

மனித வாழ்விற்கு மூச்சுப்போன்றிருப்பது வாய்மையாகும். எந்த உயிர்ப் பிராணிக்கும் துன்பம் செய்யக்கூடாது. மரணத்திற்கு அஞ்சக் கூடாது. ஐம்புலன்களையும் அடக்கி யாள வேண்டும். ஊனைத் தின்று ஊனை வளர்க் காதே.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது கடலைப் பட்டாணிக்காரன் அங்கே வந்தான். மாமா கடலை வாங்கிக் கொடுத்தார்.

செல்வி : காந்தி அடிகள் வேர்க்கடலைதான் சாப் பிடுவார்.

மாமா : வேர்க்கடலையும், பேரீச்சம்பழமும் சாப்பிடு வார். ஆட்டுப்பால் குடிப்பார். அவர் மிகவும் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். காந்தி அடிகளின் நூற்றாண்டு விழா 1969ஆம் ஆண் டில் கொண்டாடப்பட்டது.

''உண்மை பேச அஞ்சமாட்டார் காந்தித் தாத்தா
நானும் அவர்போல் நடப்பேன் நல்ல பாப்பா''

என்று செல்வி பாடினாள்.

''உண்மை பேசும் காந்தியாம்
உலகம் புகழும் காந்தியாம்
அன்பு பேசும் காந்தியாம்
அண்ணல் தன்னைப் போற்றுவோம்''

என்று முருகன் பாடினான்.

''காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்''

என்று மாமாவும் பாடினார்.

செல்வி தொடர்ந்து பாடினாள்

''எங்கள் நாட்டு விடுதலை
எமக்குத் தந்த காந்தியாம்
பொங்கும் அன்பு காந்தியாம்
புனிதன் மொழிகள் போற்றுவோம்

உலகம் ஒன்று சேரவே
உயர்ந்த வழிகள் காட்டிடும்
பலரும் போற்றும் காந்தியாம்
பாரதத்தின் தந்தையே''

வீரமா முனிவர்

முருகன் மறுபுறம் திரும்பிப் பார்த்தான். காவல்துறையின் வானொலி நிலையத்திற்கு நேராக வீரமா முனிவர் காட்சியளித்தார். சிலையின் அருகில் சென்று முருகன் படித்துப் பார்த்தான்.

தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் என்ற எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன.

முருகன் : இத்தாலிய நாட்டுக்காரர் எப்படித் தமிழ் படித்தார்?

மாமா : அவர் ஒன்பது மொழிகளில் தேர்ச்சியடைந்திருந்தார். அவருக்கு இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துகீஸ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம் முதலிய மொழிகள் தெரியும்.

செல்வி : அவருடைய முதற்பெயர் என்ன ?

மாமா : அவருடைய பெயர் 'கான்ஸ்டென்டைன் ஜோசப் பெஸ்க்கி' என்பது. இவர் 1680 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் இத்தாலிய நாட்டில் 'கஸ்டிகிளியோன்' என்னும் நகரில் பிறந்தார். இளமைப் பருவத்தில் நன்கு கற்றுத் தேர்ந்து 1700 ஆம் ஆண்டில் இலக்கண ஆசிரியராக அமர்ந்தார். சமயத் தொண்டு செய்வதற்காக 1710 ஆம் ஆண்டில் கோவா துறைமுகத்தில் வந்திறங்கினர். பிறகு கொச்சியில்

'அம்பலக்காடு' என்னும் இடத்தில் பயிற்சி பெற்ருர். பின்னர்க் காமநாய்க்கன்பட்டி, ஏலாக் குறிச்சி, கோனுன்குப்பம், கயத்தாறு, தூத்துக் குடி முதலிய இடங்களில் சமயத் தொண்டு செய்து வந்தார்.

செல்வி : பரமார்த்த குருவின் கதையை எழுதி யவர் இவர்தாமே? நகைச்சுவையுடன் எழுதி இருக்கிருர்.

மாமா : தேம்பாவணி என்னும் பெரிய நூலையும் எழுதி இருக்கின்ருர். சொற்சுவை, பொருட் சுவை நிறைந்த அந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினர். திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். மேனுட்டு முறையைப்பற்றித் தமிழில் 'சதுர கராதி'யைத் தொகுத்தார். திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை முதலிய நூல்களையும் இயற்றினர். தமிழ் எழுத் துக்களில் சில திருத்தங்கள் செய்தார். இலக் கண நூல்களைப் பயின்று 'தொன்னூல் விளக் கம்' என்னும் இலக்கண நூலை வெளியிட்டார்.

முருகன் : அயல்நாட்டிலிருந்து வந்து தமிழ்த் தொண்டு செய்தவர்களில் இவரே முதன்மை யானவர் எனக் கூறுகின்ருர்களே ?

மாமா : ஆம், நீ சொல்வது சரிதான். சமயத் தொண்டிற்கும் தமிழ்த் தொண்டிற்கும் தமது வாழ்நாளைச் செலவிட்டார். தமிழ்த் துறவி யைப் போலவே தம் உணவிலும் உடையிலும் நடையிலும் மாற்றம் செய்துகொண்டார். புலால் உணவை அறவே நீக்கிச் சைவரானர்.

செல்வி : அவர் பெயரை ஏன் மாற்றிக்கொண் டார்?

மாமா : இந்திய நாட்டிற்கு வந்தவுடன் தமது பெயரைத் 'தைரியநாத சுவாமி' என்று மாற்றி னர். பின்னர்த் தனித் தமிழாக வேண்டுமெனக் கருதிப் போலும் 'வீரமா முனிவர்' என்று மாற்றி அமைத்துக் கொண்டார்.

ஔவையார்

ஔவையார் சிலையைக் கண்டதும் செல்வி துள்ளிக் குதித்தாள். இச் சிலை மேரி அரசிக் கல்லூரிக்கு எதிரில் நிறுவப்பட்டிருக்கின்றது. "தமிழ் மூதாட்டி ஔவையார்" எனப் பொறிக்கப்பட்டிருக்கின்றது. கோலூன்றி நடப்பதுபோல் காட்சி அளிக்கின்றது.

செல்வி : ஆத்திசூடி எழுதிய ஔவையார் தாமே?

மாமா : ஆம். ஔவையார் என்னும் பெயருடைய புலவர்கள் பலர் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதியமான் கொடுத்த நெல்லிக்கனியை உண்டு இவ்வுலகில் நெடுங்காலம் நிலைத்திருந்த ஔவையாரைப்பற்றி இப்பொழுது பேசுகிறோம். அவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம் முதலிய நீதி நூல்களையும் ஔவைக் குறள் என்னும் மெய்யறிவு நூலையும் இயற்றியவர். அவர் பாடிய தனிப் பாடல்கள் பல வழங்குகின்றன. ஔவையாருடைய அறிவுநலம் எல்லோராலும் பாராட்டப்பட்டது. அவர் இயற்றிய நீதி நூல்கள் சிறியவர்கள் முதல் பெரியவர்கள்வரை எல்லோரும் கற்றுப் பயனடையத் தக்கவை.

முருகன் : நான் ஔவையார் நாடகம் பார்த்திருக்கிறேன். திரு. டி. கே. சண்முகம் ஔவையார் வேடமணிந்து அருமையாக நடிப்பார்.

செல்வி : ஔவையாருடன் முருகப் பெருமான் நேரில் பேசினராமே அந்தக் கதையைச் சொல்லுங்கள் மாமா.

மாமா : ஒருநாள் வெயில் நேரத்தில் ஔவையார் நாவல் மரத்தடியில் ஒதுங்கி நின்ருர். மரத்தின்மேல் மாடு மேய்க்கும் பையனைப்போல் முருகப் பெருமான் வீற்றிருந்தார். நாலைந்து நாவற்பழங்களைப் பறித்துப் போடென்று ஔவையார் கேட்டார். பையன் 'சுடுகிற பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா ?' என்று கேட்டான். ஔவையார் சற்றுக் குழப்பமடைந்து 'சுடுகிற பழம் எப்படி இருக்க முடியும் ? சரி போடு பார்க்கலாம்' என்ருர். பையன் கனிந்த பழங்களைப் பறித்து மண்ணில் போட்டான். ஔவையார் அவற்றை எடுத்து ஒட்டிய மண்ணை நீக்குவதற்காக வாயால் ஊதினர்.

'நாவற்பழம் சுடுமா' என்று கேட்டாயே பாட்டி இப்பொழுது ஏன் வாயால் ஊதுகிருய்? என்று கேட்டு நகைத்தான். அப்போதுதான் பையன் சொன்ன கருத்து ஔவையாருக்கு விளங்கிற்று.

'நாம் இந்தச் சிறுவனிடம் தோற்ருேமே' என்று வியந்து நின்ருர். பையன் முருகப் பெருமானுக மாறி நின்ருன். ஔவையார் முருகக் கடவுளை வாழ்த்தி வணங்கினர்.

'செந்தமிழ்ப் பெருமாட்டி யான் உன்னுடன் சிறிய விளையாடல் புரிந்தேன், வருந்தாதே; இவ்வுலகில் 'கொடியது யாது?' என வினவினர்.

'கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்' என்று தொடங்கி 'அன்பிலாப் பெண்டிரின் கையில் உண்பது மிகவும் கொடியது' என்ருர்.

'இனியது எது?' என்று கேட்டார்.

'அறிவுள்ளோரைக் கனவிலும் நனவிலும் காண்பதே இனியது' என்ருர்.

'பெரியது யாது?' என்று கேட்டார்.

'தொண்டர் பெருமை சொல்லவும் பெரிதே என்ருர்.

அரியது யாது?' என வினவினர்.

'தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே'

எனப் பாடினர்.

முருகக் கடவுள் அவரை வாழ்த்தி மறைந்தருளினர்.

செல்வி : ஔவையார் வேறு புதுமைகள் செய்திருக்கின்ருரா ?

மாமா : சுந்தரரும் சேரமான் பெருமானும் கைலைக்குச் சென்றபோது ஔவையாரும் ஆனைமுகக் கடவுளுடைய திருவருளால் கைலைக்குச் சென்ருர் என வரலாறு கூறுகின்றது. ஔவையாருடைய சிறப்பை நன்குணர்ந்த தமிழ் மக்கள் நெடுங்காலத்து முன்னரே சிலைகள் அமைத்து வழிபாடுகள் செய்துள்ளனர். தஞ்சை மாவட்டத்திலும், அடையாறு ஔவை இல்லத்திலும் அவருடைய சிலைகளைக் காணலாம்.

பெண் அறிஞரின் சிலையைப் பெண்கள் கல்லூரிக்கு முன்னல் வைத்திருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கின்றது.

திருக்குறளைப் பற்றி இவரிடம் பேசியபோது அறம் பொருள் இன்பம் மூன்றையும் சொல்வதற்கு 1330 பாடல்கள் வேண்டுமா என்று, அதில் பேரின்ப வீட்டையும் சேர்த்து ஒரே பாடலாகப் பாடினர்.

''ஈதல் அறம், தீவினை விட்டு ஈட்டல்பொருள்,
எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித் தாதரவு
பட்டதே இன்பம், பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.''

பாரதிதாசன்

வெல்லிங்டன் மகளிர் கல்லூரிக்கு எதிரில் பாரதிதாசன் சிலையை நோக்கிச் சென்றனர்.

செல்வி : பாரதிதாசன் என்று ஏன் பெயர் வைத்துக் கொண்டார்?

மாமா : இவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியாரின் விடுதலைப் பாடல்கள் அவருடைய உள்ளத்தில் புரட்சிக்கனலை அள்ளி வீசியது. தாமும் பாரதியாருடைய பாடல்களைப்போல் பாடத்தொடங்கினர். இருவருக்கும் நட்பு உண்டாகியது. நாளடைவில் சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறினர்.

முருகன் : சிலையின் அடியில் 'புரட்சிக் கவிஞர்' என்று பொறிக்கப்பட்டிருக்கின்றது.

மாமா : அவர் ஒரு புரட்சிக் கவிஞர்தாம். தம் அரிய பாடல்களினால் நம் மக்களிடையே விழிப்பு உணர்ச்சி உண்டாக்கினர். சீர்திருத்த நோக்கங்களையும் நாட்டுப்பற்றையும் ஊட்டினர். 1891ஆம் ஆண்டில் புதுச்சேரியில் கனகசபை முதலியார் என்பவருக்குப் புதல்வராகத் தோன்றினர். தமது 18ஆவது வயதிலேயே பெரும் புலவராக விளங்கினர். செய்யுள் இயற்றும் திறம் இவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. காரைக்கால், புதுச்சேரி முதலிய இடங்களில் தமிழாசிரிய

ராகப் பணியாற்றினர். "குயில்" என்னும் பெயரோடு திங்கள் இதழ் ஒன்று நடத்தினர்.

செல்வி: அவருடைய நினைவு என்றும் நிலைத்திருக்கும்.

மாமா: அவருடைய தமிழ்த் தொண்டை நாம் என்றும் மறக்க முடியாது. சேரதாண்டவம், காதலா கடமையா, படித்த பெண்கள், இசையமுது, இன்பக்கடல், திருமணத் திட்டம், மக்கட்பேறு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் 73 ஆண்டுகள் வாழ்ந்து 1964 ஏப்ரல் 21 ஆம் நாள் உலக வாழ்வைத் துறந்தார்.

"வண்ணப் பூவும் மணமும்போலே
மகர யாழும் இசையும்போலே
கண்ணும் ஒளியும்போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ"

என்று தமிழ் மொழியுடன் கொஞ்சுகின்றார்.

நிலவைக் காணும்போது இயற்கை இன்பத்தில் மூழ்கி,

"சிந்தாமல் சிதறாமல் அழகையெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்திரித்த வண்ணம்தானோ
உனைக்காணும் போதினிலே என்னுள்ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவதில்லை

எனப் பாடுகின்றார்.

"கனியின் சுளையும், கரும்பின் சாறும்,
பசுவின் பாலும், பனிமலர்த் தேனும்
இனியன என்பேன் எனினும் தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்"

எனத் தமிழ் அன்பைப் பறைசாற்றுகின்றார்

"நமதடா இந்நாடு, என்றும் நாம்
இந்நாட்டின் வேந்தர் சமம் இந்நாட்டு
மக்கள் என்றே தாக்கடா வெற்றிமுரசை'

என்று வீரமுழக்கம் செய்கின்றார்.

விவேகானந்தர்

வெல்லிங்டன் மகளிர் கல்லூரிக்கு அருகில் விவேகானந்தரின் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது. யாத்திரை செய்யும் அடியாரைப்போல் காட்சி யளிக்கின்ருர்.

முருகன் : விவேகானந்தருக்கு நூற்ருண்டு விழாக் கொண்டாடப்பட்டது.

மாமா : அவருக்குக் கன்னியாகுமரியில் நினைவு மண்டபம் அமைத்திருக் கின்ருர்கள். அஃது அவர் தவம் செய்த பாறையின்மேல் கட்டப்பட்டது. குடியரசுத் தலைவர் கிரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கன்னியாகுமரிக்குச் சென்ருல் பார்த்துவிட்டு வரலாம். குமரி அம்மனுக்கும் வழிபாடு செய்யலாம்.

மாமா : அடுத்த விடுமுறையில் போகலாம். அங்குள்ள சிலைகளையும் பார்க்க லாம். விவேகானந்தர் இமயம் முதல் குமரி வரை திருத்தலப்பயணம் செய்தார். மன்னர்களுக்கெல்லாம் நல்லறிவு புகட்டினர்.

முருகன் : அவர் பி. ஏ. படித்துத் தேர்ச்சி பெற்றவர் அல்லவா ?

மாமா : படித்தால் மட்டும் போதுமா? அவர் நல்ல அறிவும் ஆற்றலுமுடை யவர். கல்கத்தாவில் விசுவநாத தத்தர் என்பவருக்கும் புவனேசுவரி அம்மையார் என்பவருக்கும் 1863ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் நாள் அருந்

தவப் புதல்வராகத் தோன்றினர். இவருடைய பிள்ளைப்பெயர் நரேந்திரநாத தத்தர் என்பது. இராமகிருட்டிண முனிவருடைய அருளினால் இவருக்கு மெய்யறிவு தோன்றியது. பெயரும் விவேகானந்தர் என்று மாறியது.

செல்வி: எதற்காக அமெரிக்காவிற்குச் சென்றார்?

மாமா: அமெரிக்காவில் உலகச் சமய மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளும்படி இராமநாதபுரம் மன்னரும் மைசூர் மன்னரும் விவேகானந்தரிடம் மிகவும் வேண்டிக் கொண்டனர். அமெரிக்காவுக்குப் போய் வருவதற்குத் தகுந்த பொருளுதவியுஞ் செய்தனர். சென்னை நகர அறிஞர்களும் மாணவர்களும் பொருள் திரட்டிக் கொடுத்தனர். விவேகானந்தர் சிக்காகோவிற்குச் சென்று உலக மாநாட்டில் இந்து மதத்தின் பெருமைகளை எடுத்துரைத்தார். அவர் செய்த முதற்சொற்பொழிவிலேயே அமெரிக்கர்களுடைய நன்மதிப்பைப் பெற்றார். அவருடைய புகழ் உலகமெங்கும் பரவியது.

பிறகு இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவருடன் சீடர்கள் பலர் சென்றனர். இந்தியாவிற்குத் திரும்பியபோது அவருக்கு எல்லா இடங்களிலும் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

முருகன்: விவேகானந்தர் மிகவும் நல்லவர். ஏழை மக்களிடம் அன்பு பாராட்டினர்.

மாமா: சென்னை, கல்கத்தா முதலிய இடங்களில் இராமகிருட்டிண மடங்களை நிறுவி ஏழைகளுக்கு உதவியளிக்க ஏற்பாடுகள் செய்தார். தூங்கிய நாட்டைத் தட்டி எழுப்பி முன்னேறும் வழியைக் காட்டினர்.

"எழுமின் விழிமின்
குறிசாரும் வரை
நில்லாது செல்மின்"

என்று அறிவுரை கூறினர்.

"வலிமையே வாழ்வு வலிவின்மையே மரணம்" என்றார். 'யான், எனது என்னும் செருக்கை அகற்றுங்கள்' என்றார். வலிமை, தொண்டு, தன்னடக்கம், துறவு, முயற்சி முதலிய பண்புகளைப் போற்றி வளர்த்தார்.

1902ஆம் ஆண்டில் கல்கத்தாவிலுள்ள இராமகிருட்டிண மடத்தில் வீடுபேறெய்தினார். மக்கள் அவருக்குச் சிலை நாட்டி அவருடைய தொண்டினைப் பாராட்டுகின்றனர்.

விவேகானந்தர் பல அறிவுரைகளை வழங்கியுள்ளார் :—

"வாய்மையே வெல்லும்.

வீரர்களாக வாழவேண்டும்.

நெஞ்சு உரத்துடன் நிற்கவேண்டும்

உள்ளிருக்கும் தெய்வத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.

இறைவனுக்குத் தொண்டுசெய்ய விரும்புகின்றவர்கள் முதலில் இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் பணி செய்தல் வேண்டும்.

பிறரைக் குறைகூறுதல் பாவம்.

அன்பிற்காகவே அன்புசெய்."

அன்னிபெசன்ட் அம்மையார்

வெல்லிங்டன் மகளிர் கல்லூரிக்கு வடபுறம் பெசன்ட் சாலையின் கடற்கரை முனையில் அன்னிபெசன்ட் அம்மையாரின் சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

செல்வி : இவர் இலண்டன் நகரிலிருந்து வந்தவர்தாமே?

மாமா : ஆம், இலண்டனிலிருந்து இந்தியாவிற்கு வந்து இந்திய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் விடுதலைக்காகவும் போரிட்டார்.

முருகன் : அவருக்கு எதனால் அப்படி மனம் திரும்பியது?

மாமா : அவருக்கு இளம் வயதிலேயே இந்தியாவின்மீது பற்றுதல் ஏற்பட்டது. இந்தியாவைப்பற்றி சிறு நூல் ஒன்று எழுதி வெளியிட்டார். இந்தியாவிற்கு வந்தவுடன் நாடு முழுவதையும் சுற்றிப்பார்த்து இந்திய மக்களின் அவல நிலையைக் கண்டு மனம் வருந்தினார். இந்திய விடுதலைக்குப் பாடுபட வேண்டுமென்று முடிவு செய்தார்.

இவர் 1874ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் இலண்டனில் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் வில்லியம் பேஜ்உட். தாயார் பெயர் மௌரிஸஸ். இளமையிலேயே தந்தையை இழந்து மார்யாட் என்னும் சீமாட்டியின் ஆதரவில் வளர்ந்து வந்தார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளைக் கற்றார். இசைக்கலையும் பயின்றார். பிராங்க்

பெசன்ட் என்பவரை மணந்து இரண்டு குழந்தைகளை ஈன்றெடுத்தார். பின்னர்க் கண வரைப் பிரிந்து பொதுவாழ்க்கையில் புகுந்தார்.

செல்வி : கல்வித்துறையில் என்ன தொண்டு செய்தார்?

மாமா : இந்தியர்கள் கல்வித்துறையில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருப்பதைக் கண்டு உயர்தரக் கல்வியளிக்க வேண்டுமென்று முடிவு செய்தார். 1881ஆம் ஆண்டில் பிரமஞானக் கழகத்தில் சேர்ந்து அக்கழகத்தின் தலைவ ரானார். 1898ஆம் ஆண்டில் காசியில் இந்துக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார். பிறகு மகளிர் கல்லூரியும் தாழ்த்தப்பட்டோர் பள்ளிகளும் தொடங்கினார். காசியில் தொடங் கிய கல்லூரி பெரிதாக வளர்ந்து பல்கலைக்கழக மாகத் திகழ்கின்றது. இவருடைய கல்வித் தொண்டைப் பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கப் பட்டது.

முருகன் : அரசியலில் எப்படிப் பணியாற்றினார்?

மாமா : ஆங்கில நாட்டைச் சேர்ந்தவராக இருந்தும் ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து நின்று சிறை புகுந்தார். இந்திய நாட்டின் நன்மைக்கே தமது வாழ்நாளைச் செலவிட்டார். காங்கிரஸ் அவையின் தலைவி யாகவும் தொண்டாற்றினார்.

செல்வி : அவர் நல்ல எழுத்தாளர் அல்லவா?

மாமா : எழுத்தாளர் மட்டுமல்லர்; சிறந்த பேச்சாள ராகவும் விளங்கினார். பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவருடைய சிலை ஒன்று சென்னை அரண்மனைக்காரத் தெரு விலுள்ள கோகலே மண்டபத்திலும் காட்சி யளிக்கிறது. 1933ஆம் ஆண்டில் அடையாற்றி லுள்ள பிரமஞானக் கழகத்தில் ஞான ஒளியிற் கலந்தார். அவருக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்.

———

போப் ஐயர்

சிலையின் அருகில் சென்று செல்வி படித்துப் பார்த்தாள் "ஒரு தமிழ் மாணவன்" என்று பொறிக்கப்பட்டிருந்தது.

முருகன்: அயல்நாட்டிலிருந்து வந்து தமிழ்ப் புலவராய்விட்டாரே.

செல்வி: தமிழ் மொழியின் அருமையை நாம் உணர்வதில்லை. மற்றவர்கள் அதனிடம் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றார்கள்.

மாமா: அதனால்தான் பாரதியார்

'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்''

என்று இடித்துக் கூறுகிறார்.

செல்வி: போப்பையர் தமிழுக்கு என்ன நன்மை செய்தார்?

மாமா: அவர் 1838 ஆம் ஆண்டிலேயே தமிழும் வடமொழியும் கற்கத் தொடங்கினார். தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களை ஆராய்ந்து ஓர் இலக்கண நூலை இயற்றினார். திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவற்றின் சிறப்பையும் தமிழர்களின் பண்பாட்டையும் அயல்நாட்டினர் தெரிந்து கொள்ளும்படி செய்தார்.

1820 ஆம் ஆண்டில் பிரின்ஸ் எட்வர்டு தீவில் தோன்றியவர். சமயத் தொண்டிற்காக இந்தியா விற்கு வந்தார். சென்னையில் சேந்தோம் என்னும் இடத்தில் தங்கி இருந்தார்.

அவரை டாக்டர் ஜி. யூ. போப் என்றும் அழைப்பர்.

முருகன்: தூத்துக்குடிக்கு அருகில் சாயர்புரத்தில் அவருடைய பெயரில் கல்லூரி ஒன்று இருக் கிறது.

மாமா: ஆம். அவர் சென்னையிலிருந்து சாயர் புரத்திற்குச் சென்று கல்வியைப் பரப்பினர். நன்கு தமிழ் கற்றுச் சிறந்த புலவரானர்.

செல்வி: இலக்கணம் எனக்குக் கடினமாக இருக் கிறது.

மாமா: போப்பையர் அதனை எளிமையாக்கி இருக்கிருர். அவர் எழுதிய நூல் இலக்கணம் கற்பதற்குச் சிறந்த துணையாக இருக்கின்றது. "தனிச் செய்யுட் கலம்பகம்" என்ற நூல் ஒன் றைத் தொகுத்து வைத்தார். பல உரைநடை நூல்களையும் வெளியிட்டார். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் தொண்டு செய்து 1882 ஆம் ஆண்டில் இந்தியாவை விட்டுப் புறப் பட்டார்.

முருகன்: அவர் தமிழுக்குச் செய்த தொண்டை நாம் என்றும் மறக்க முடியாது.

மாமா: ஆம். அவர் தமிழில் இன்பம் கண்டவர். 1908 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அவருடைய விருப்பப்படி லண்ட னில் ஆக்ஸ்போர்டில் உள்ள அவருடைய கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன்" என்று எழுதப்பட்டுள்ளது.

திருவள்ளுவர்

அடுத்தபடியாகத் திருவள்ளுவர் சிலையைப் பார்க்கச் சென்றனர்.

மாமா : உலகமெல்லாம் பரவியிருக்கும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

முருகன் : திருக்குறளில் எல்லாம் அடங்கி இருக்கின்றது.

மாமா : ஆம். அதில் சொல்லப்படாத செய்தி ஒன்றுமில்லை என்பதனை வலியுறுத்தும் பொருட்டு,

> ''எல்லாப் பொருளும் இதன்பால் உள
> இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்''

என மதுரைத் தமிழ் நாகனார் கூறுகின்றார்.

செல்வி : மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோவில் இருக்கின்றது. அறுபத்துமூவர் திருவிழாவின்போது திருவள்ளுவரும் வலம் வருவார்.

மாமா : தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் திருமயிலையில் வாழ்ந்திருந்தார். வாசுகி என்னும் பெண்மணியை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தினார். நெய்தல் தொழிலை மேற்கொண்டிருந்தார் எனப் பழைய வரலாறுகள் கூறுகின்றன.

திருக்குறள் உலகப் பொதுமறை; சிந்தைக்கும் செவிக்கும் இனியது. சாதி சமய கட்சி நிற வேறுபாடின்றி யாவர்க்கும் உரியது.

"ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததன்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்"

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களை உடையது. 1330 குறள்வெண்பாக்கள் கொண்டது. நீதி நூல்கள் அனைத்திற்கும் முற்பட்டது. திருக்குறளுக்குப் பொய்யாமொழி, தெய்வநூல், தமிழ் மறை முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன.

திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளை மதுரைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றச் சென்றபோது சங்கப் பலகை விரிந்து இடம் கொடுத்ததெனக் கூறப்படுகின்றது. இந்நூல் இருபதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : முன்பே திருவள்ளுவருக்கு ஒரு சிலை சென்னையில் வைத்துள்ளார்கள். இல்லையா மாமா?

மாமா : ஆமாம். இங்கிருக்கும் திருவள்ளுவர் சிலை நிற்பதுபோல் அமைக்கப்பட்டிருக்கின்றது. மயிலாப்பூர் சமக்கிருதக் கல்லூரிக்கு அருகில் சங்கப் பலகையில் அமர்ந்திருப்பதுபோல் காட்சியளிக்கின்றார். அதில் "உலகப் பொது மறை தந்த திருவள்ளுவர்" எனப் பொறிக்கப் பட்டிருக்கின்றது.

செல்வி : கடவுள் வாழ்த்தில் பத்துக் குறள்களும் எனக்குத் தெரியும்.

முருகன் : கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக 'வான்சிறப்பு' வைக்கப்பட்டிருக்கின்றது. ஏன் தெரியுமா?

செல்வி : "நீரின்றி அமையாது உலகு" அதனால் தான் கடவுளுக்கு முதலிடமும் மழைக்கு இரண்டாவது இடமும் அளித்திருக்கிறார்.

மாமா ; நீங்கள் சொல்வது உண்மைதான், குறளை எல்லோரும் படிக்க வேண்டுமென்று உந்து வண்டிகளில்கூட எழுதிவைத்திருக்கிறார்கள். திருவள்ளுவர் படத்தையும் பக்கத்

தில் வைத்திருக்கிறார்கள். தெருவெல்லாம் திருக்குறள் பரப்ப வேண்டும், திருக்குறள் நெறியில் மக்கள் வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் இந்த ஏற்பாடு செய்துள்ளனர்.

திருக்குறள் எக்காலத்தும் எல்லோராலும் போற்றப்பெறும் தனிப்பெரு நூலாக விளங்குகின்றது. இத்தகைய அரும்பெரும் நூலிலுள்ள குறள்களைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் நாட்குறிப்பில் வெளியிட்டு வருகின்றனர். 1932ஆம் ஆண்டு முதல் நாள் ஒன்றுக்கு ஒரு குறளாக ஆண்டுக்கு 365 குறள்கள் வெளியிட்டு வருகின்றனர். மணற்கேணியைப்போன்று திருக்குறளைப் படிக்கப் படிக்க அறிவு ஊறுகின்றது. டாக்டர் மு. வரதராசனார் ஆக்கித் தந்த 'திருக்குறள் தெளிவுரை' யினைக் கழகத்தினர் நூறாயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பிவருகின்றனர்.

முருகன்: நான் தேர்வில் வெற்றி பெற்றதற்குத் திருக்குறள் அன்பளிப்பாகக் கிடைத்தது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது. மிகவும் அழகான பதிப்பு.

செல்வி: நான் நாள்தோறும் திருக்குறள் படிக்கப் போகிறேன்.

> "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாடினாள்.

மாமா: திருவள்ளுவர் 2000 ஆண்டு விழா அண்மையில் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப் பெற்றது. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் அயல்நாட்டுப் பேரறிஞர் போப் பையர். அவருடைய சிலையைச் சற்று முன்னர் தானே பார்த்தோம்.

கண்ணகி

கண்ணகியின் சிலை சினக் குறியுடன் காணப்பட்டது.

செல்வி : கையிலிருப்பது என்ன ?

முருகன் : இது தெரியாதா, காலில் போடும் சிலம்பு.

செல்வி : சிலம்பின் கதையே சிலப்பதிகாரம்.

முருகன் : 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியார் போற்றி இருக்கின்றார்.

செல்வி : கண்ணகியின் கதையைச் சொல்லுங்கள் மாமா.

மாமா : கற்பரசியாகிய கண்ணகி காவிரிப்பூம்பட்டினம் என்னும் புகார் நகரில் மாநாய்கன் என்னும் வணிகனுக்கு மகளாகப் பிறந்து கோவலனை மணம் புரிந்தாள். கோவலன் மாதவி என்ற பெண்ணுடன் சேர்ந்து பெரும்பொருளை இழந்தான். பின்னர்க் கண்ணகியின் சிலம்பை விற்றுப் பொருள்தேட மதுரைக்குச் சென்றான். அவன்மேல் களவுக் குற்றம் சுமத்தப்பட்டது. பாண்டிய மன்னன் சரியாக உசாவுதல் செய்யாமல் கொலைத் தண்டனை யளித்தான். கண்ணகி கடுஞ்சினங் கொண்டு மன்னனிடம் சென்று கோவலன் குற்றமற்றவன் என்று விளக்கினாள். மன்னன் தவற்றை உணர்ந்து உயிர் நீத்தான்.

கண்ணகி பெருஞ் சீற்றங்கொண்டு மதுரை எரியச் செய்தாள். சேரன் செங்குட்டுவன் என்ற அரசன் கண்ணகியின் பெருமையை உணர்ந்து அவளுக்குச் சிலை அமைத்துச் சிறப்புகள் செய்தான். பின்னர் இலங்கையிலும் வேறுபல இடங்களிலும் சிலைகள் நிறுவப்பட்டன.

கண்ணகியின் கதை மிகவும் உயர்ந்தது. மனித வாழ்க்கையை இயக்கும் முப்பெரும் உண்மைகளைக் கொண்ட ஒப்பற்ற கதை.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டு மென்பதும்"

இதில் காட்டப்படுகின்றது.

கண்ணகியின் கதையைக் கேட்டுச் செல்வி கண் கலங்கினாள். சிலையின் முன்னால் மண்டியிட்டு வணங்கினாள்.

மாமா : தமிழ்மொழியில் முதன் முதலாகத் தோன்றிய காப்பியம் சிலப்பதிகாரம். இயல் இசை, நாடகம் என்ற மூவகைத் தமிழும் இதில் கலந்து விளங்குகின்றது. இதனை இலக்கியச் சுவை மிக்க செந்தமிழ்க் காப்பியம் எனக் கூறலாம். இந்நூல் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகப் பாராட்டுகின்றது.

உ. வே. சாமிநாத ஐயர்

சென்னை மாநிலக் கல்லூரியில் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.

முருகன்: இவரைத் "தமிழ்த் தாத்தா" என்று அழைக்கின்றார்கள்.

மாமா: அது மிகவும் பொருத்தமான பெயர். பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு அவர் ஓயாது உழைத்தார். தம்முடைய பெரு முயற்சியினால் மிகப் பழைய தமிழ் நூல்களைத் தேடிப்பிடித்து வெளியிட்டார். அதற்காக இறுதி மூச்சு உள்ளவரை பாடுபட்டார். இந்நூல்களை அவர் வெளிக்கொணராமலிருந்தால் நாம் பல அரிய நூல்களை இழந்திருப்போம்.

செல்வி: அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர்?

மாமா: தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் என்னும் ஊரில் 1855 ஆம் ஆண்டு பிப்ரவரி 19ஆம் நாள் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் வேங்கடசுப்பிரமணிய ஐயர். சாமிநாத ஐயருக்கு இடப்பட்ட பிள்ளைப்பெயர் வேங்கடராமன். பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சாமிநாதன் என்ற பெயரைச் சூட்டினார். இளம் வயதிலேயே ஐயர் அவர்கள் ஆத்திசூடி, மூதுரை, நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களை மனப்பாடம் செய்தார். மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் நான்கு ஆண்டுகள் பாடம் கேட்டார்.

முருகன் : ஆசிரியர் வேலை பார்த்தாரா?

மாமா : ஆம். கும்பகோணம் கல்லூரியில் 23 ஆண்டுகள் வேலை பார்த்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் 1903 முதல் 1919 வரை வேலை பார்த்து ஓய்வு பெற்றார்.

செல்வி : அவருடைய உழைப்பினால் நாம் அருமையான தமிழ் நூல்களைப் படித்து இன்புறுகின்றோம்.

மாமா : பழங்காப்பியங்களைத் தேடுவதும், சரிபார்ப்பதும், அச்சிடுவதும் அவருடைய வேலையாக இருந்தது. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல் முதலிய நூல்களையெல்லாம் தேடிக் கண்டுபிடித்துப் பல சுவடிகளுடன் ஒப்பு நோக்கி அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

'தமிழ்விடு தூது' என்னும் நூலின் அடிகளை வெண்பா ஆக்கி;

> "இருந் தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
> உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
> பதிப்பிக்க வேகடைக்கண் பார்"

எனத் தமிழன்னையை வேண்டுகின்றார்.

ஐயரவர்கள் தமிழ் நாடெங்கும் சிதறிக்கிடந்த இலக்கிய ஏடுகளை எல்லாம் தேடிப்பெற்றுச் செல்லரித்துக் கிடந்த பகுதிகளைச் சீராக்கி, அனைவரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் அச்சிட்டு உதவினார். அறுபது ஆண்டுகள் வரை தமிழ்ப்பணி புரிந்து 1942 ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார். அவருடைய புகழுடம்பு சிலைவடிவாக நின்று காட்சியளிக்கின்றது.

சுப்பிரமணிய பாரதியார்

பாரதியாரின் சிலை பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கு நேராக வைக்கப்பட்டிருக்கின்றது. 'அஞ்சா நெஞ்சம் படைத்த பாரதியார்'' என்ருன் முருகன். 'மக்களைத் தட்டி எழுப்பிய பாரதியார்' என்ருர் மாமா. 'பாப்பாப் பாட்டுப் பாடிய பாரதியார்' என்று செல்வி பாடத் தொடங்கினுள்.

''ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடிவிளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா''

''காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலைமுழுதும் விளையாட்டு என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா''

''பொய் சொல்லக் கூடாது பாப்பா என்றும்
புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா''

பாரதியார் புதுமையான கவிகள் பாடித் தமிழர் உள்ளத்தில் என்றும் அழியாத இடம் பெற்றவர். குழந்தை

உள்ளம் கொண்டவர். வீறுபெற்ற மனமுடையவர். இயற்கைக் காட்சிகளைக் கண்டால் மயங்கி விடுவார். ஏழைகளிடம் இரக்கம் காட்டுவார்.

முருகன் : அவர் தமிழ்மொழியில் நிறைந்த பற்று உடையவர்.

மாமா : ஆம். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடி இருக்கிறார்.

"கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோவைப்போல் யாங்கணுமே
கண்டதில்லை உண்மை வெறும்புகழ்ச்சி இல்லை"

என வற்புறுத்திக் கூறுகின்றார்.

முருகன் : "உலகமெலாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்" எனவும் பாடுகின்றார்.

மாமா : அது உண்மையாகிவிட்டது. உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்று வருகின்றன. சென்னையில் தமிழ் மாநாடு நடந்தபோது தமிழறிஞர்களின் சிலைகள் நாட்டப்பட்டன. பாரிசில் நடந்த மாநாட்டை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

செல்வி : பாரதியாரின் கதையைச் சொல்லுங்கள் மாமா.

மாமா : பாரதியார் பாண்டி நாட்டிலுள்ள எட்டையபுரத்தில் 1882ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் இலட்சுமி அம்மாள். இளம் வயதிலேயே நந்தனார் கீர்த்தனையும் காவடிச் சிந்தும் விரும்பிப்படிப்பார். காசியில் சிலகாலம் கல்வி கற்றார்.

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நாடு விடுதலைபெற்று வாழவேண்டும் என்ற எண்ணம் இவரிடம் வளர்ந்தோங்கி நின்றது. நாட்டுப்பற்று அமையும்படி இசைப்பாடல்களைப் பாடினார். இவருடைய பாடல்களைக் கேட்ட மக்கள் பொங்கி எழுந்தனர். ஆங்கில ஆட்சி நடுக்கம் கொண்டு பாரதியாரைச் சிறையிலிடத் திட்டமிட்டது. அவர் புதுவைக்குச் சென்று அரவிந்தர், வ. வே. சு. ஐயர் முதலியவர்களுடன் தொடர்பு கொண்டார்.

பாரதியார் பொதுநோக்குடையவர். அவருடைய பாடல்கள் தேசிய கீதங்கள், தோத்திரப்

பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, விநாயகர் நான்மணி மாலை, புதிய ஆத்திசூடி, முரசு, பாப்பாப் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலியன பகுதி களாக அமைந்துள்ளன.

முருகன்: பாரதியாரின் வாழ்த்துப் பாடலைப் பாடினான்:

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே"

"ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே"

செல்வி: தமிழின்மேல் உயிரையே வைத்திருக் கிறார்.

மாமா: கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாட்டைக் கேளுங்கள்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினனடா. அதைக்
கேட்டுக் கிறுகிறுத்துப் போயினேனடா"

முருகன்: பாரதியார் யானையிடம் விளையாடுவார் என்று சொல்வார்களே!

மாமா: ஆம். அஃது ஒரு துன்பக் கதை. பாரதியார் சென்னையிலிருந்தபோது அடிக்கடி பார்த்த சாரதி கோவிலுக்குப் போவார். கோவில் யானைக்குத் தேங்காய், பழம் முதலியவைகளை வாங்கிக் கொடுப்பார். ஒரு நாள் யானை மதங் கொண்டிருந்தபோது அண்மையில் சென்றார். யானை அவரை மிதித்துவிட்டது. அதனால் ஏற்பட்ட காயங்களால் அவர் உடல் நலம் குன்றி 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

செல்வி: ஐயோ பாவம்! அவரைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லையா?

மாமா: ஒரு நண்பர் ஓடி வந்து கை கொடுத்தார். இல்லாவிடில் அந்த இடத்திலேயே இறந்து போயிருப்பார். எட்டையபுரத்தில் அவருடைய நினைவுக் குறியாகப் பாரதி மண்டபம் அமைக்கப் பட்டிருக்கின்றது.

கம்பர்

நூற்றுண்டு மண்டபத்திற்கு எதிரிலிருப்பது கவி அரசர் கம்பரின் சிலை. "கல்வியிற் பெரியர் கம்பன்" என்றான் முருகன்.

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றாள் செல்வி.

மாமா: கம்பருடைய கவிநயத்திற்கு இணை ஏது?

> "தொட்டாலும் கை மணக்கும்
> சொன்னாலும் வாய் மணக்கும்
> தூய சேற்றில் நட்டாலும்
> தமிழ்ப் பயிராய்த் தழைக்கும்தானே"

செல்வி: 'கம்பராமாயணம்' என்றால் மாமா கவலையில்லாமல் படித்துக் கொண்டே இருப்பார்.

முருகன்: கம்பர் எந்த ஊரில் பிறந்தார்?

மாமா: சோழவள நாட்டில் திருவழுந்தூரில் தோன்றினார். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் ஆதரவு பெற்றிருந்தார். தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைத் தம் பாடல்களில் பெரிதும் போற்றியுள்ளார். இராமா யணத்தை இராப்பகலாக நாள் ஒன்றுக்கு எழுநூறு பாடல்கள் பாடியதாகவும் கூறப்படுகின்றது. அவருடைய பாடல்களில் கற்பனை நயங்கள் அமைந்து பொருந்தியுள்ளன. கம்பர் பல இடங்களில் குறட்பாக்களின் கருத்துக்களை

அமைத்து இராமாயணத்தை அழகுபெறச் செய்துள்ளார்.

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூம்
உண்பதூம் இன்றிக் கெடும்"

என்னுங் குறளைத் தமது பாடலில்

"கொடுப்பது விலக்கு கொடியோய் உனது
சுற்றம் உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி
[விடுகின்றாய்"

எனப் பாடுகின்றார்.

இதைப்போல் இராமாயணப் பாடல்களில் பல இடங்களில் திருக்குறள் புதைந்து கிடப்பதைக் காணலாம்.

முருகன் : அப்படியே படம் பிடித்து வைத்திருக்கிறாரே!

மாமா : ஆம். கம்பன் கவிதையின் இனிமை தமிழ் மக்களின் மனத்தைக் கொள்ளை கொண்டுள்ளது. இதனைப் பலரும் கற்றுணர்ந்து மகிழ்கின்றனர்.

செல்வி : கம்பர் மறைந்து எவ்வளவு காலம் ஆகி இருக்கும்?

மாமா : அவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆண்டுதோறும் கம்பன் விழாக் கொண்டாடப் படுகின்றது.

முருகன் : "கம்பன் கவிதையைப்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே"

மாமா : இனிய காப்பியத்தைச் செய்து தமிழ் மக்களுக்குப் பெருமை உண்டாக்கிய கம்பரை என்றும் மறவாமல் போற்ற வேண்டும். பாட்டுக்குத் தலைவனாக எடுத்துக் கொண்ட இராமனைப் புகழ்ந்து பாடுகின்றார் :—

"நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும்
உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறு வோர்க்கே',

கால்டுவெல்

தமிழறிஞர் கால்டுவெல் அவர்களின் சிலை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எதிரில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

மாமா : இவருடைய முழுப்பெயர் ராபர்ட் கால்டுவெல் என்பது. இவர் 1814ஆம் ஆண்டில் அயர்லாந்து நாட்டில் ஒரு சிற்றூரில் தோன்றினார்.

முருகன் : இவருக்குத் தமிழ் மொழிப்பற்று எப்படி வந்தது ?

சமயத்தொண்டு செய்வதற்காக இந்தியாவிற்கு வந்தார். சென்னையிலிருக்கும்போது தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார். தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொண்டார். பிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் இடையன்குடி என்ற ஊரில் தங்கி அவ்வூர் மக்களுக்குப் பல நன்மைகள் செய்தார். பள்ளிகள் கட்டினார்; குளங்கள் வெட்டினார்; தமிழ் மொழியில் மிகுந்த ஆர்வம் கொண்டு சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள் முதலிய நூல்களைப் பயின்றார். தென்னிந்திய மொழிகளை ஆராய்ச்சி செய்து 'ஒப்பிலக்கணம்' என்னும் அரிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

செல்வி : தூத்துக்குடியில் அவர் பெயரில் ஓர் உயர்நிலைப்பள்ளி நடைபெற்று வருகின்றது.

மாமா : ஆம். தமிழுக்குத் தொண்டு செய்த பெரியாரை நாம் எப்படி மறக்க முடியும்? திருநெல்வேலி சரிதம், தாமரைத் தடாகம், ஞானஸ்நாநம், நற்கருணை முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

முருகன் : தமிழின் இனிமையைக் கண்டு மயங்கி விட்டார் போலிருக்கிறது.

மாமா : அவர் இடையன்குடியில் ஐம்பத்து மூன்று ஆண்டுகள் வரை அருந்தொண்டுகள் செய்தார். எலிசா என்னும் ஆங்கில மாதை மணந்து இல்லறம் நடத்தி வந்தார். பின்னர்க் கோடைக் கானலுக்குச் சென்று தமது 76ஆம் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அவர் விருப்பப்படி உடல் இடையன்குடியில் அடக்கம் செய்யப்பட்டது.

மாமா : "திராவிடமொழிகள் ஓரினத்தைச் சேர்ந்தவை" என முதன் முதலாக உலகிற்கு உணர்த்தியவர் இவரே.

செல்வி : சிலையில் என்ன எழுதி இருக்கிறது?

முருகன் : "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை வகுத்த ஆங்கிலேயர்" என்று எழுதப்பட்டிருக்கின்றது.

மாமா : பிற தொடர்களையும் படித்துப் பார்க்கலாம். "தமிழ்மொழி மிகப் பழங்காலத்திலேயே பண்பட்டதும் வளர்ச்சி பெற்றதும் ஆகும்" எனப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

விக்டோரியா அரசி

விக்டோரியா அரசியின் சிலை பல்கலைக்கழகத்தில் மிகவும் அழகாகச் செய்து வைக்கப்பட்டிருக்கின்றது.

விக்டோரியா மிகவும் நல்ல அரசி. அவர் இந்திய மக்களுக்குப் பல நன்மைகள் செய்திருக்கின்றார்.

“சமயத் தொடர்புள்ள எதிலும் நாங்கள் தலையிட மாட்டோம். உங்கள் விருப்பம்போல் வழிபாடுகள் செய்யலாம்” எனக் கூறி அனைவர்க்கும் சம உரிமை வழங்கினார்.

ஆங்கிலநாட்டு அரசியானாலும் அவர் இந்திய மக்களுக்குச் செய்த நன்மைகளால் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார்.

இவர் கென்ட் கோமகனின் புதல்வியாக 1819 ஆம் ஆண்டு மே 24ஆம் நாள் தோன்றினார். அடுத்த ஆண்டில் தந்தையை இழந்தார். 1837ஆம் ஆண்டு தமது 18ஆம் அகவையில் ஆங்கில நாட்டு அரசியானார். 1840ஆம் ஆண்டில் ஆல்பர்ட் இளவரசரை மணந்து நான்கு ஆண் குழந்தைகளையும் ஐந்து பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார்.

இந்திய நாட்டைக் கிழக்கு இந்தியக் கம்பெனியாரிடமிருந்து நீக்கித் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்து பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

முருகன்: இவருக்குப் பொன் விழாவும், வைர விழாவும் கொண்டாடப்பட்டனவாம்.

மாமா: ஆம். உனக்கு எப்படித் தெரியும்? மிகப் பழைய காலத்தில் அவ்விழாக்கள் நடைபெற்றன. 1887 ஆம் ஆண்டில் அவருடைய ஆட்சியின் பொன் விழாக் கொண்டாடப்பட்டது. 1897 ஆம் ஆண்டில் வைர விழாவும் சிறப்பாக நடைபெற்றது. இவருடைய காலத்தில் நாடு மிகவும் செழித்திருந்தது. தொழில் துறையும் விஞ்ஞானமும் முன்னேற்றமடைந்திருந்தன.

விக்டோரியா அரசியின் நினைவுச் சின்னங்களும் நிலையங்களும் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவர் தம்முடைய எண்பத்தொன்றும் அகவையில் காலமானார். அவருடைய சீரிய ஆட்சி நலனை நாம் வியந்து பாராட்டுகின்றோம்.

செல்வி: நேரமாகிவிட்டது. வீட்டிற்குப் போகலாமா?

மாமா: இதுவரை காந்தி அடிகள் முதல் விக்டோரியா வரை பதினான்கு சிலைகளைப் பார்த்தோம். மற்றைச் சிலைகளை நாளைக்குப் பார்க்கலாம்.

1. காந்தியடிகள், 2. வீரமாமுனிவர், 3. ஒளவையார், 4. பாரதிதாசன், 5. விவேகானந்தர், 6. அன்னிபெசன்ட், 7. போப் ஐயர், 8. திருவள்ளுவர், 9. கண்ணகி, 10. சாமிநாத ஐயர், 11. சுப்பிரமணிய பாரதியார், 12. கம்பர், 13. கால்டுவெல், 14 விக்டோரியா அரசி.

கோபாலகிருஷ்ண கோகலே

செல்வியும் முருகனும் மறுநாள் காலையில் மாமாவுடன் மீண்டும் கடற்கரைக்குச் சென்றனர்.

மாமா : கடற்கரையில் மீதி இருக்கும் சிலைகளை இப்பொழுது பார்த்து விடலாம்.

முருகன் : பல்கலைக்கழகத்திற்குப் போகலாம்.

செல்வி : கோகலேயின் சிலையைப் பார்க்கலாம்.

மாமா : காந்தி அடிகள் கோகலே அவர்களைத் தமது அரசியல் குருவெனப் பாராட்டுகின்றார்.

இவர் கோலாப்பூருக்கு அருகிலுள்ள ககல் என்னும் ஊரில் 1866ஆம் ஆண்டு மே 9ஆம் நாள் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் கிருஷ்ணராவ். தாயார் பெயர் சத்தியபாமா. பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றார். 'தென்னாட்டுக் கல்விக் கழகம்' என்ற கழகத்தில் சேர்ந்து ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆங்கிலேயரின் அடிமைத் தளையிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டார்.

திலகருடன் தொடர்புகொண்டு நாட்டுப் பற்றில் சிறந்து விளங்கினார். குல வேற்றுமைகளை அகற்றுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டிச் சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பினார்.

முருகன்: காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தவரா?

மாமா: ஆம். காங்கிரஸில் சேர்ந்து ஆங்கிலேயரின் தவறுகளையெல்லாம் சுட்டிக்காட்டினார். இந்திய மக்களின் நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஓயாது உழைத்து வந்தார். பின்னர் காந்தியடிகள் மேற்கொண்ட உரிமைப் போராட்டங்களுக் கெல்லாம் கோகலேயின் கொள்கைகள் வித்துகளாக அமைந்தன.

செல்வி: கோகலேயும் தென் ஆப்பிரிக்காவிற்குப் போயிருந்தாரா?

மாமா: ஆம். காந்தியடிகளின் அழைப்பின்மீது தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்த இந்தியர்களுடைய அவல நிலையை நேரில் கண்டறிந்தார். அதன்பொருட்டு ஆங்கில அரசை எதிர்த்துப் போரிட்டார்.

முருகன்: கல்வியைப் பரப்புவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்தார்?

மாமா: ஆங்கிலேயரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இந்திய நாட்டு மக்களுக்கு உயர்ந்த கல்வியறிவை அளிக்கவேண்டுமென்று பாடுபட்டார். நாட்டை ஆள்வதற்கு நல்ல முறையில் பயிற்சியளிக்க வேண்டுமென்று எண்ணினார். ஆங்கிலேயருடன் போராடி ஓரளவு வெற்றியும் பெற்றார்.

இவருடைய சிறப்பினை அறிந்து அரசினர் உயர்ந்த பட்டங்களை அளிக்க முன்வந்தனர். ஆனால் அவற்றைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். நாட்டு விடுதலைக்காக உழைத்தலையே தமது கடமையாகக் கொண்டிருந்தார்.

செல்வி: மிகவும் நல்ல மனிதர்; தற்பெருமை இல்லாதவர்.

மாமா: அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. 1915ஆம் ஆண்டு பிப்ரவரி 19ஆம் நாள் உலக வாழ்வை நீத்தார். அவருடைய நினைவுச் சின்னமாக அரண்மனைக்காரத் தெருவில் 'கோகலே மண்டபம்' ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. அதில் அவருடைய சிலையும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

சுப்பிரமணிய ஐயர்

இவருடைய சிலையும் பல்கலைக்கழகத்திலேயே வைக்கப்பட்டிருக்கின்றது.

மாமா: இவர் பெருந்தன்மையுடையவர் பொதுநன்மைக்காகவே வாழ்ந்தவர். உயர் நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவர்.

முருகன்: கல்விக்குத் தொண்டு செய்திருப்பார். அதனால்தான் பல்கலைக்கழகத்தில் வைத்திருக்கின்றார்கள்.

செல்வி: இவர் எந்த ஊரிலிருந்து வந்தவர் ?

மாமா: இவர் மதுரை மாவட்டத்தில் 1842 ஆம் ஆண்டு அக்டோபர் முதல்நாள் பிறந்தார். அரிய பழைய நூல்களை யெல்லாம் தொகுத்து வைக்கப் பெற்றிருக்கும் மறைமலை அடிகள் நூலகத்தில் இவரைப்பற்றி ஒரு பழைய புத்தகம் கிடைத்தது. அதில் இவருடைய வரலாறு வெளியிடப்பட்டிருக்கின்றது. ஐயர் அவர்கள் மாவட்ட அலுவலகத்தில் இருபது ரூபாய் ஊதியத்தில் சேர்ந்தார்.

சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானர். 1870 ஆம் ஆண்டில் மதுரை நகராட்சியின் ஆணையராக அமர்ந்தார்,

1885 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக உறுப்பினராகப் பணியாற்றினார். 1888 ஆம் ஆண்டில் அரசாங்க வழக்கறிஞராக வேலை பார்த்தார். 1887 ஆம் ஆண்டுமுதல் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தார். 1895 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தபோது பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.

செல்வி: பெண்கள் எல்லாம் ஐயர் அவர்களுக்கு முதலில் நன்றி செலுத்த வேண்டும்.

மாமா: இவர் பன்னிரண்டு ஆண்டுகள் நீதிபதியாக இருந்தார். தலைமை நீதிபதியாகவும் சிலகாலம் வேலைபார்த்து 1907 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் நாள் ஓய்வுபெற்றார். 1893 ஆம் ஆண்டு முதல் பிரமஞான அவையுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஓய்வுபெற்ற பிறகும் பொதுப் பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார்.

முருகன்: காங்கிரஸில் சேர்ந்தவரா?

மாமா: ஆம். காங்கிரஸில் முக்கிய உறுப்பினராக இருந்து நாட்டுக்குச்சேவை செய்தார். சென்னையில் நடந்த 29 ஆம் காங்கிரஸ் கூட்டத்தை முன்நின்று நடத்தினார். இறைவனிடம் இடையறாத பேரன்பு பூண்டு ஒழுகிவந்தார். மக்களுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்தார்.

செல்வி: இவருடைய சிலையில் என்ன எழுதி இருக்கிறது என்று பார்க்கலாம்.

திவான் பஹதூர் சர். எஸ். சுப்பிரமணிய ஐயர் பி.எல்., எல்.எல்.டி , கே.ஸி.சி.ஐ.

முருகன்: பட்டம் நீளமாக இருக்கிறது.

இச்சிலையின் அடியில், "பொதுமக்களின் பொருளுதவியைக்கொண்டு கட்டப்பட்டது" எனவும் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

கிருஷ்ணசாமி ஐயர்

இவருடைய சிலை பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : இவர் எந்த ஊரைச் சேர்ந்தவர்?

மாமா : 1863 ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் தோன்றினர். கல்வியில் தேர்ச்சி பெற்று 1884 ஆம் ஆண்டில் வழக்கறிஞர் ஆனர். ஏறக்குறைய கால் நூற்றண்டுவரை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக இருந்து பிறகு நீதிபதியானர். தாம் ஈட்டிய பொருளையெல்லாம் அறநிலையங்களுக்கு வாரி வழங்கினர்.

பல்கலைக்கழகச் சொற்பொழிவாளர்களுக்கு நன்கொடை வழங்கினர்.

செல்வி : எவ்வளவு பணம் செலவு செய்தார்?

மாமா : கல்வியைப் பரப்புவதற்காகத் தமது சொத்தில் பாதியைச் செலவு செய்தார். பல்கலைக்கழகத்திலும் உறுப்பினராக இருந்தார். இவர் சிறந்த பேச்சாளர்.

செல்வி : கல்வியைப் பரப்புவதற்காகப் பாடுபட்டவர். அவரை நாம் என்றும் மறக்க முடியாது.

மாமா : வடமொழிப் பயிற்சி, இந்திய மருத்துவம், இந்து சமயக்கல்லூரி முதலியவற்றிற்கு ஆதரவளித்தார். காங்கிரஸில் சேர்ந்து நாட்டு

விடுதலைக்காக உழைத்தார். மயிலாப்பூரில் வெங்கடரமணா மருத்துவ விடுதியும் மருத்துவக் கல்லூரியும் கட்டி வைத்தார். சமஸ்கிருதக் கல்லூரிக்குப் பண உதவிகள் செய்தார். மகா ஜன அவையில் உறுப்பினராக இருந்தார். 1908ஆம் ஆண்டில் இவருக்குப் பட்டமும் பதக்கமும் அளிக்கப்பட்டன.

முருகன் : இவர் மறைந்தாலும் இவருடைய புகழ் மறையவில்லை.

செல்வி : சிலையில் எழுதி இருப்பதைப் படிக்கலாம் வாருங்கள்.

வி. கிருஷ்ணசாமி ஐயர் சி. எஸ். ஐ.
சட்டமன்ற உறுப்பினர்

தோற்றம்	மறைவு
1863	1911

'பொதுமக்களின் உதவியால் இச்சிலை கட்டப்பட்டது'

என்று எழுதி இருக்கிறார்கள். புகழொடு தோன்றுவதைப் பற்றிய குறள் தெரியுமா ?

முருகன் :

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

இலக்குமணசாமி முதலியார்

இவருடைய சிலை பல்கலைக்கழகத்தின் முன்புறம் நிறுவப்பட்டிருக்கின்றது. துணைவேந்தராக இருக்கும்போதே இச்சிலை நிறுவப்பெற்றது.

செல்வி : எத்தனை ஆண்டுகள் துணைவேந்தராக இருந்தார்?

மாமா : ஓர் ஆண்டா! இரண்டு ஆண்டா! 1942 ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டு வரை இப்பதவியிலிருந்தார்.

முருகன் : இராமசாமி முதலியாரும் இலக்குமணசாமி முதலியாரும் இரட்டைப் பிள்ளைகள்தாமே?

மாமா : ஆம். இவர்கள் உலகப்புகழ் பெற்ற இரட்டையர்கள். வடஆர்க்காடு மாவட்டத்தில் ஆர்க்காடு என்னும் ஊரில் குப்புசாமி முதலியார் என்பவர் வாழ்ந்திருந்தார். அவருடைய மனைவியின் பெயர் காமாட்சி அம்மையார். 1887ஆம் ஆண்டில் குப்புசாமி முதலியார் அவர்கள் கர்நூலில் அரசாங்க அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார். அக்டோபர் 14 ஆம் நாள் அம்மையாருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. உலக வழக்கப்படி அக்குழந்தைகளுக்கு இராமர் இலக்குமணர் என்று பெயரிட்டனர்.

இலக்குமணசாமி முதலியார் படித்துத் தேறி மருத்துவப் பட்டம் பெற்ருர். பிள்ளைப் பேறு பார்க்கும் மருத்துவத்தில் நிகரற்ற புலமை பெற்ருர். மகப்பேற்றுத்துறைப் பேரா சிரியராகவும் மருத்துவத் துறைக் கண்காணிப் பாளராகவும் பணி புரிந்தார். இவரும் இவர் தமையனுர் சர் இராமசாமி முதலியாரும் ஆங் கிலத்திலே இணையற்ற பேச்சாளர்களாவர்.

செல்வி: வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய் திருக்கிருரா?

மாமா: ஆம். உலகமெங்கும் சுற்றுப்பயணங்கள் செய்து மேனுட்டு மருத்துவ முறைகளைக் கண் டறிந்தார். கல்வித் துறையிலும் பணிபுரிந்து தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த தடைகளை நீக்கினுர்.

முருகன்: அரசினர் இவருக்குப் பல பட்டங்கள் வழங்கியுள்ளனர்.

மாமா: ஆக்ஸ்போர்டு, ஹாங்காங் முதலிய பல்கலைக் கழகங்கள் இவருக்குச் சிறந்த பட்டங் களை வழங்கியுள்ளன. உடன் பிறந்தார் இரு வரும் உலகப் புகழ் பெற்றவர்கள். இராமசாமி முதலியார் ஆட்சித் திறனும், தொழில் நுணுக் கமும் உடையவர். இலக்குமணசாமி முதலி யார் மருத்துவ சேவையிலும் கல்விப் பணி யிலும் பெரும் புகழ் பெற்றவர். எழும்பூர் தாய்சேய் மருத்துவ மனையில் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து நற்புகழ் பெற்ருர். இவருடைய நற்குணங் களையும் நற்பணிகளையும் நாம் என்றென்றும் போற்றுவோம்.

பிரகாசம்

அண்ணுமலை மன்றத்திற்கு எதிரிலிருப்பது ஆந்திர நாட்டுத் தலைவர் பிரகாசம் அவர்களின் சிலை.

மாமா : இவரை 'ஆந்திர கேசரி' என்பார்கள்.

முருகன் : ஏன் அந்தப் பெயர் வந்தது ?

மாமா : அவர் சிங்கத்தைப்போல் முழக்கம் செய்வார். காங்கிரஸ் தலைவராக இருந்து விடுதலைப் போரில் சிறைபுகுந்தவர்.

செல்வி : காங்கிரஸ் ஆட்சியில் சென்னை முதலமைச்சராகப் பணியாற்றியவர்.

மாமா : முதலில் நிதி அமைச்சராக இருந்தார். 1946 ஆம் ஆண்டில் முதலமைச்சரானுர். இங்கிலாந்தில் சட்டக் கல்வி படித்துத் தேர்ச்சி யுற்றவர். ஒத்துழையாமை இயக்கத்தின்போது வழக்கறிஞர் தொழிலை விட்டுத் துறந்து இயக்கத்தில் ஈடுபட்டார்.

சிறிது காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். 1930 ஆம் ஆண்டில் அப்பதவியிலிருந்து விலகி விடுதலைப்போரில் இறங்கினுர்.

பின்னர்க் காந்தி அடிகள் நடத்திய உப்புப் போரில் சேர்ந்து சிறை புகுந்தார்.

சென்னையில் 'ஸ்வராஜ்யா' என்ற இதழ் ஒன்று நடத்தினர். சென்னை மாநிலத்திலிருந்து ஆந்திர நாடு பிரிந்தபோது சென்னை நகரை ஆந்திராவுடன் இணைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதற்குத் தமிழ் மக்கள் இடம் கொடுக்கவில்லை.

பிரகாசம் அவர்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறந்த சேவைகள் புரிந்ததால் அவருக்குச் சிலை வைத்து வாழ்த்துகிறோம்.

இவர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். ஆங்கிலப் பேரரசை எதிர்த்து நின்று வெற்றி பெற்றவர். காந்தி அடிகளின் உண்மையான தோழர். நாடு விடுதலையடைந்த பிறகு பல எதிர்ப்புகளுக்கிடையில் திறமையுடன் ஆட்சி செலுத்தினர். கிளர்ச்சிக்காரர்களைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்டினர். இவரை நாம் என்றும் மறக்க முடியாது.

அண்ணுமலைச் செட்டியார்

அண்ணுமலை மன்றத்தில் செட்டி நாட்டு அரசர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.

மாமா : இவர் பெருஞ் செல்வர். பல அறங்களைச் செய்தவர்.

முருகன் : அதனுல்தான் அரசாங்கத்தினர் இவருக்கு அரசர் பட்டம் வழங்கியுள்ளனர்.

மாமா : அரசர் பட்டத்தை வழிவழியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உரிமையும் வழங்கப்பட்டிருக்கின்றது.

இவர் கானுடுகாத்தான் என்னும் ஊரில் 1881 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30 ஆம் நாள் தோன்றினுர். தந்தையார் பெயர் முத்தையா செட்டியார். தாயார் பெயர் மீனுட்சி அம்மையார். சிறுவயதில் கல்வி பயின்று தந்தையாருக்கு உதவியாகக் கடைகளைக் கவனித்துக்கொண்டார். தந்தையார் காலமானபிறகு தமது திறமையினுல் தாமே வாணிபம் நடத்திக் கோடிக்கணக்காகப் பொருள் சேர்த்தார்.

செல்வி : இவரைக் கோடீஸ்வரன் எனக் கூறலாம்.

மாமா : இவருடைய கடைகள் இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா, சையாம், சைகோன், கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களில் இருந்தன. பர்மாவில் இவருக்குச் சொந்தமான நிலங்கள் ஏராளமாக இருந்தன.

முருகன்: "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்றபடி கடல்கடந்து சென்று பொருளைத் தேடி வைத்திருக்கிறார். 1911 ஆம் ஆண்டில் லண்டனில் ஐந்தாம் ஜார்ஜ் அரசரின் முடிசூட்டு விழாவிற்குச் சென்றார்.

இவர் தமது பெரு முயற்சியால் தேடிய பொருளை அறவழிகளில் செலவு செய்தார். காரைக்குடி காத்தானில் பெண்களுக்கு மருத்துவச் சாலை ஒன்று ஏற்படுத்தினார். சிதம்பரம் உயர் நிலைப் பள்ளியின் அறங்காவலராக இருந்தார். சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியைத் தொடங்கி வைத்தார். திருவேட்களம் என்ற ஊர் முழுவதையும் வாங்கி அதற்கு அண்ணாமலை நகரென்று பெயரிட்டு அங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

முருகன்: அண்ணாமலை நகர் சிதம்பரத்திற்கு அருகில் இருக்கின்றது.

செல்வி: மார்கழி மாதம் சிதம்பரத்திற்குப் போய்த் திருவாதிரை விழாவைப் பார்க்கலாம். கூத்தப் பெருமானுக்கு வழிபாடுகள் செய்யலாம்.

மாமா: செட்டியார் அவர்கள் சீதை ஆச்சியை மணந்து முத்தையா செட்டியார் முதலிய மக்களைப் பெற்றெடுத்துச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். கல்வியறம் மட்டுமன்றி உணவிடும் அறச்சாலைகளையும் கட்டி வைத்தார். திரு வேட்களம் என்னும் கோவிலிலும் தில்லை கோவிந்தராஜர் கோவிலிலும் திருப்பணிகள் செய்து வைத்தார். சென்னையில் தமிழிசையை வளர்க்கும் பொருட்டுத் தமிழிசைச் சங்கத்தை நிறுவினார்.

இவர் 1948 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். செட்டியார் அவர்களின் பேரறங்களை மனத்தில் கொண்டு அவரை வாழ்த்துகின்றோம்.

திருவாங்கூர் அரசர் இராமவர்மா

அண்ணுமலை மன்றத்திற்கு எதிரில் திருவாங்கூர் அரசர் இராமவர்மா அவர்களின் சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : இரண்டு ஆங்கில அரசர்களைப் பார்த்தோம். இப்பொழுது இந்திய மன்னரைப் பார்க்கிறோம்.

செல்வி : நம் நாட்டில் குடியரசு வந்த பிறகு மன்னர்களுக்கு இடமில்லாமல் போய்விட்டது.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதியார் பாடுகின்றார்.

மாமா : இராமவர்மா அவர்கள் 1912 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் நாள் தோன்றினர், தமது கல்வியை முடித்துக்கொண்டு ஐரோப்பாவிலும் இலங்கையிலும் சுற்றுப் பயணம் செய்தார்.

திருவாங்கூர் இராணுவத்தின் தலைவராகவும், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினர். 1936 ஆம் ஆண்டில் தீண்டப் படாதவர்கள் கோவிலுக்குள் போவதற்கு ஒப்புதல் அளித்தார். தொழிற் பயிற்சிக்கும் கலைகளின் முன்னேற்றத்திற்கும் கல்லூரிகள் அமைத்தார்.

முருகன் : இவ்வரசர் வேறு என்ன நன்மைகள் செய்தார்?

மாமா: போக்குவரத்துத்துறை, பயிர்த்தொழில், தொழில்துறை முதலியவற்றில் கவனம் செலுத்தினர். மின்சாரம், ரப்பர்த் தொழில் முதலியவற்றைப் பெருக்கினர். மருத்துவமனை களுக்கும், விஞ்ஞானக் கழகங்களுக்கும் பொருள் கொடுத்து உதவினர். அனைத்து விடுதிகள் ஏற்படுத்தினர். கலைக்கூடம் ஒன்று அமைத்து அதில் காட்சிப் பொருள்களை வைத்தார். நாட்டுக்கு நன்மை செய்த மன்னரை நாம் மறவாமல் போற்றுகின்றோம்.

முருகன்: திருவாங்கூர் அரசருக்குச் சென்னையில் ஏன் சிலை வைத்தார்கள் ?

மாமா: கேரளம் முதலில் சென்னையுடன் இணைந்ிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் தனி நாடாகப் பிரிந்து போய்விட்டது. சேரர் பரம்பரையில் வந்த மன்னரின் சிலை மட்டும் தமிழ் நாட்டிலேயே தங்கிவிட்டது.

செல்வி: இவருடைய முழுப் பெயரையும் படித்துப் பார்க்கலாம். "மாட்சிமை பொருந்திய திரு பத்மநாபதாசர் வஞ்சிபால பலராமவர்மா குலசேகர கிரீடபதி மகாராஜ ராஜ" இராம ராஜ பகதூர் ஜி. சி. ஐ. இ. டி. லிட் என்று எழுதப்பட்டிருக்கின்றது.

———

ஐந்தாம் ஜார்ஜ்

செல்வியும் முருகனும் மாமாவுடன் பூக்கடை காவல் நிலையத்தின் பக்கம் சென்று ஐந்தாம் ஜார்ஜ் அரசரின் சிலையைக் கண்டனர். ஜார்ஜ் அரசரின் சிலைகள் தியாகராய நகர் பனகல் பூங்காவிலும், கோட்டைக்கு அண்மையிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

இவர் 1865ஆம் ஆண்டில் பிறந்தவர். ஏழாவது எட்வர்டு மன்னரின் புதல்வர், விக்டோரியா அரசியின்பேரர். இந்திய மக்களுக்கு நன்மை புரிய வேண்டுமென்னும் குறிக்கோளுடன் இருந்தார். காந்தி அடிகளை அழைத்துப் பேசினார். ஆயினும் அவர் தம் அமைச்சர்களுடைய போக்கை மீறி எதுவும் செய்ய முடியாத நிலையிலிருந்தார்.

முருகன் : அமைச்சர்கள் நன்றாக ஆராய்ந்து துணிவாகக் கருத்தைச் சொல்வார்கள். அதனை அரசர் ஏற்றுக்கொள்வார்.

செல்வி : ஜார்ஜ் மன்னர் கடற்படையில் சேர்ந்தவரா?

மாமா : ஆம், அதில் நன்றாகப் பயிற்சி பெற்றவர். 1910 ஆம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தார். 1914 ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் தொடங்கியது. இந்திய மக்களின் விடுதலைப்போரும் கடுமையாக நடந்தது. நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தார். அதற்குள் அவருடைய ஆயுள் முடிந்துவிட்டது. 1936 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

முத்துச்சாமி ஐயர்

இவருடைய சிலை உயர் நீதி மன்றக் கட்டிடத்தின் முதல் மாடியில் சலவைக் கல்லினால் அமைக்கப்பட்டிருக்கின்றது.

முருகன்: நீதிபதியாக இருந்தவரா?

மாமா: உயர் நீதிபதியாக முதலில் வந்த இந்தியர் இவர். 1832 ஆம் ஆண்டு சனவரி 28 ஆம் நாள் திருவாரூருக்கு அண்மையிலுள்ள உச்சுவாடி என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வேங்கட நாராயண சாத்திரியார். ஐயர் அவர்கள் இளம் வயதிலேயே தம் தந்தையை இழந்தார். தாயார் தம்மாலானவரை முயன்று அவருக்குச் சிறிது கல்வி கற்பித்தார். இவர் முதலில் ஒரு கணக்கரிடம் மாதம் ஒரு ரூபாய் ஊதியத்தில் அமர்ந்தார்.

செல்வி: ஏழ்மையான நிலையிலிருந்து விடாமுயற்சியால் உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" —குறள்

மாமா: இவருடைய நுண்ணறிவைக் கண்டு வியந்த அதிகாரி ஒருவர் இவரை உயர்நிலைப்பள்ளியில் சேர்த்துவைத்தார். கல்வி கற்றுத்

தேர்ச்சி யடைந்து சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். சிறந்த கட்டுரை ஒன்றை எழுதி ஐந்நூறு ரூபாய் பரிசு பெற்ருர். பி. ஏ. தேர்வில் வெற்றி பெற்று மாநிலக் கல்லூரியில் அறுபது ரூபாய் ஊதியத்தில் ஆசிரியராக அமர்ந்தார். பிறகு தஞ்சைக்குச் சென்று தலைமை அலுவலகத்தில் எழுத்தர் வேலை பார்த்தார்.

செல்வி: ஆசிரியர் வேலை அவருக்குப் பிடிக்க வில்லையா?

மாமா: விதி அவரை இழுத்துச் சென்றது. நாளடைவில் முன்சீபாகவும், உதவி கலெக்டராகவும், நீதிமன்ற நடுவராகவும் உயர்வு பெற்ருர். வேலை பார்த்துக் கொண்டே பி. எல் படித்து முதல் வகுப்பில் தேறினர். நீதிமன்ற நடுவராக இருந்த காலத்தில் நீதி முறையில் சிறிதும் வழுவாது நேர்மையுடன் கடமையைச் செய்து வந்தார்.

முருகன்: எத்தனை ஆண்டுகள் உயர்நீதி மன்றத்தில் இருந்தார்?

மாமா: பதினைந்து ஆண்டுகளுக்குமேல் உயர்நீதி மன்றத்தில் பணியாற்றினர். தலைமை நடுவராகவும் பணி புரிந்தார். உழைப்பால் உயர்ந்து நேர்மையுடன் நடந்து 1895 ஆம் ஆண்டு சனவரி 25 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவருடைய சிறந்த பண்புகளை மற்றவர்களும் பின் பற்ற வேண்டுமென்று அவருடைய சிலையை உயர்நீதி மன்றக் கட்டிடத்திலேயே வைத்துப் போற்றுகின்ருேம்.

செல்வி: அவருடைய அறிவுத் திறமையினல் உயர்ந்த பதவிக்கு வந்திருக்கிருர்.

மாமா: கற்றவரே உயர்ந்தவர். கற்ற கல்வியின் அளவு அறிவு ஊறுகின்றது.

> " தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு" —குறள்,

பாஷியம் ஐயங்கார்

உயர்நீதி மன்றக் கட்டிடத்தின் வடபுறத்தில் பாஷியம் ஐயங்கார் அவர்களின் சிலை இருக்கின்றது.

மாமா : இவர் உயர்நீதி மன்ற நடுவராக இருந்தவர்.

முருகன் : வழக்கறிஞராக இருந்து நீதிபதியாக உயர்ந்திருப்பார்.

மாமா : இவர் 1844 ஆம் ஆண்டில் தோன்றியவர். முதலில் துணைப் பதிவாளராக அரசாங்க அலுவலில் அமர்ந்தார்.

செல்வி : சட்டக் கல்வியில் தேர்ச்சியுற்றிருப்பார்.

மாமா : மீண்டும் படித்துத் தேர்ச்சி பெற்று பி. எல். தேர்வில் முதல்வராக நின்றார். சிறந்த வழக்கறிஞராக விளங்கினார். வழக்கறிஞர் தொழிலோடு நின்றுவிடாமல் நாட்டுப் பணியிலும் நாட்டத்தைச் செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இவர் நிகழ்த்திய சொற்போர் கருத்துச் செறிவோடு விளங்கியது. அரசினர் ஒவ்வொரு சட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு முன்னர் ஐயங்காரின் திருத்தத்திற்கு அனுப்புவது வழக்கம்.

செல்வி : சட்டத்தைக் கரைத்துக் குடித்தவர் போலிருக்கிறது.

மாமா: 1901 ஆம் ஆண்டில் உயர்நீதி மன்ற நடுவராக அமர்த்தப் பெற்ருர். இவர் வழங்கிய தீர்ப்புகள் சட்ட வல்லுநர்களால் பாராட்டப் பெற்றன. எவ்வளவு சிக்கலான வழக்காலு லும் சிறு குறிப்புக்களை வைத்துக் கொண்டே வாதாடுவார். இவர் இளகிய மனமும் எளிய பழக்கமும் கொண்டவர்.

சட்டத்துறையில் தலைசிறந்து விளங்கிய ஐயங்கார் அவர்கள் 1908 ஆம் ஆண்டில் உலக வாழ்வை நீத்தார்.

முருகன்: எந்த வழக்காலுலும் எடுத்து நடத்து வாரா?

மாமா: வணிக வழக்குகளை வெற்றியுடன் நடத்து வார். வழக்கறிஞர் தொழிலில் மிகவும் சிறந்து விளங்கினர். முக்கியமாக இந்து சட்டத்திலும் நிலச் சட்டத்திலும் வல்லவராக இருந்தார். குடும்ப வேறுபாடுகளைக் களைவதிலும் பாகப் பிரிவினை செய்வதிலும் திறமை பெற்றவர்.

செல்வி: இவ்வளவு வேலைகளையும் வைத்துக் கொண்டு நாட்டுச் சேவையிலும் கவனம் செலுத்தி இருக்கின்ருர்.

மாமா: அதனல்தான் அவரைப் பாராட்டுவதற்காக அழகிய சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.

டாக்டர் வில்லியம் மில்லர்

குழந்தைகள் பாஷியம் ஐயங்காரின் சிலைக்குப் பின்னாலுள்ள மில்லர் அவர்களின் சிலையைப் பார்வையிட்டனர்.

செல்வி : இவர் நீதிபதியாக இருந்தவரா?

மாமா : நீதி மன்றத்தின் அண்மையில் இருப்பதால் அப்படி நினைக்கின்றாய். இவர் கிறித்துவக் கல்லூரியின் முதல்வர். இவரே அதனைத் தொடங்கி வைத்தவர்.

முருகன் : அப்படியானால் இவருடைய சிலையைத் தாம்பரத்தில்தானே வைக்கவேண்டும்.

மாமா : கிறித்துவக் கல்லூரி முதலில் இச் சிலைக்கு நேராக லிங்கிச் செட்டி தெருவின் முனையிலிருந்தது. சிலை மட்டும் முன் இருந்த இடத்திலேயே தங்கிவிட்டது.

டாக்டர் மில்லர் ஸ்காட்லாந்தில் தர்சோ என்னும் ஊரில் 1838 ஆம் ஆண்டு சனவரி 13ஆம் நாள் தோன்றினார். இவருடைய தந்தை வில்லியம் மில்லர் என்பவர் கப்பல் வணிகராக இருந்தார். மில்லர் படித்துத் தேர்ச்சியடைந்து எடின்பரோ பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

பிறகு சமயத் தொண்டில் ஈடுபட்டு 1862 ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்தார். சென்னையிலிருந்த கிறித்துவப் பள்ளியைக் கல்லூரியாக்கினர். 1867 ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உறுப்பினரானர்.

கல்விக்காகப் பல ஆண்டுகள் உழைத்து 1907 ஆம் ஆண்டில் இந்தியாவை விட்டுத் திரும்பிச் சென்றார். 1923 சூலை 15 ஆம் நாள் உலக வாழ்வைத் துறந்தார். இவருடைய சிலையில்,

"சமயத் தொடர்புள்ள ஆசிரியர்;
சிறந்த அன்புடையவர்; பொது நன்மைக்
காகப் பாடுபட்டவர்; கல்வியைப் பரப்பு
வதில் இணையற்று விளங்கியவர்"

என ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

செல்வி : முழுவதும் படித்துப் பார்க்கலாம்.

"வில்லியம் மில்லர் எல். எல். டி டி டி. சி. ஐ. இ.
கிறித்துவக் கல்லூரியின் தலைவர்.
சென்னை ஆளுநர் லார்டு ஆம்தில்
அவர்களால் 1901 ஆம் ஆண்டு சனவரி
முதல் நாளன்று திறந்துவைக்கப்பட்டது.

முருகன் : கல்வி கற்றவரே உயர்ந்தவர்.

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"
—மூதுரை

"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" —குறள்

வ. உ. சிதம்பரனர்

'கப்பலோட்டிய தமிழன்' என்று தமிழர்கள் பாராட்டும் வ. உ. சிதம்பரனரின் சிலை துறைமுகத்திற்கு நேராக வைக்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : மிகவும் பொருத்தமான இடம். கப்பல்கள் வந்து தங்குமிடத்திலேயே வைத்திருக்கிருர்கள்

மாமா : இவர் 1872 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் நாள் ஓட்டப்பிடாரம் உலகளந்தபிள்ளை என்பவருக்கும் பரமாயி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராகத் தோன்றினர். இளமைக் கல்வியை முடித்துத் திரிசிரபுரம் கல்லூரியில் சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானர். தமிழ் மொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தார்.

செல்வி : விடுதலைப் போரில் சிறை சென்று துன்பப்பட்டார் என்று சொல்வார்கள்.

மாமா : நாட்டுக்காக அனைத்தையும் இழந்து துன்பப்பட்டவர்; கப்பலோட்டி ஆங்கிலேயரைக் கலங்க வைத்தவர்.

நாட்டு விடுதலைக்காகக் காங்கிரசில் சேர்ந்து வெள்ளையரை எதிர்த்துப் போராடினர். தேசீயக்கவி பாரதியார் இவருக்கு நண்பரானர். பாரதியாருடைய பாட்டு இவருக்கு அளவு கடந்த ஊக்கத்தை அளித்தது. தென்னுடெங்கும்

சென்று விடுதலை முழக்கம் செய்தார். திலகரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டார்.

முருகன் : இவர் எதற்காகக் கப்பலோட்டினார் ?

மாமா : கப்பல் வாணிபம் செய்து பொருள் தேடுவதில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். நாமும் ஏன் கப்பல் ஓட்டக்கூடாதென்று இவர் இரண்டு கப்பல்களை வாங்கிக் கடலில் செலுத்தினார்.

செல்வி : நெடுங்காலத்திற்கு முன்னரே செந்தமிழ் நாட்டு மக்கள் கப்பல் வாணிகம் செய்துள்ளனர். வெள்ளைக்காரன் ஏன் தடுக்க வேண்டும்?

மாமா : சிதம்பரனாருடைய செய்கை ஆங்கிலேயருக்கு மிகுந்த சீற்றத்தை உண்டாக்கியது. விடுதலைப் போராட்டக் குற்றத்தைச் சுமத்தி இவரைக் கைதியாக்கிச் சிறையில் அடைத்தனர். எதிர்த்து நின்றதால் செக்கிழுத்தல் முதலிய கடுமையான வேலைகளைக் கொடுத்து இவரைத் துன்புறுத்தினர்.

முருகன் : பாவம் நாட்டுவிடுதலைக்காக அவ்வளவு பாடுபட்டிருக்கிறார்.

மாமா :

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்று பாரதியார் பாடியபடி அஞ்சா நெஞ்சத்துடன் தாய் நாட்டிற்காக அரும்பாடுபட்டார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவின்போது இவருக்கு விடுதலை கிடைத்தது. சிறையிலிருந்து வெளி வந்ததும் மீண்டும் அரசியல் சேவையில் இறங்கினார்.

'சிதம்பரனாரின் சொற்பொழிவைக் கேட்டால் செத்த பிணமும் உயிர்த்தெழும்' என்று வெள்ளைக்கார நீதிபதி தமது தீர்ப்பில் எழுதினார்.

செல்வி : சிதம்பரனார் தமிழுக்கு என்ன தொண்டு செய்தார் ?

மாமா : சேம்சு ஆலன் எழுதிய ஆங்கில நூல்கள் இவர் உள்ளத்தைக் கவர்ந்தன. அவற்றில் மூன்று நூல்களை மொழி பெயர்த்து அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மனம் போல வாழ்வு என்பவற்றை வெளியிட்டார். தொல்காப்பியம் இளம்பூரணர் உரையும், இன்னிலை

யென்னும் நூலையும், பிறவற்றையும் அச்சிட்டு வெளியிட்டார். பல மாணவர்களுக்குத் திருக்குறளிலும் தொல்காப்பியத்திலும் பாடம் சொன்னார்.

சிதம்பரனார் சிறையில் வாடியிருந்த போது பாரதியார்,

'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ''

என்று இறைவனிடம் முறையிட்டார்.

சிதம்பரனார் மிகவும் சிறந்த நண்பர், கொடைப் பண்புடையவர். தூய்மை யுடையவர். சிறந்த தமிழ்ப் புலவர். நாட்டுப் பற்றில் ஊறிக் கிடந்தவர் இல்லை யென்று வந்தவர்களுக்கு இல்லையென்னமல் கொடுப்பவர்.

''திருவும் புகழும் சிறந்தன பிறவும் பெருந்தேயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியமிதுவே''

எனக் கூறுகின்றார். நாட்டு மக்களுக்கு வீரத்தை ஊட்டிய சிதம்பரனார் 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். 1968 ஆம் ஆண்டு சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது இவருடைய சிலை திறந்து வைக்கப்பட்டது.

நாடு விடுதலையடைந்த பிறகு 1949 ஆம் ஆண்டில் தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்குச் சென்ற முதற் கப்பலுக்கு 'வ. உ. சிதம்பரம்' என்ற பெயர் சூட்டப்பட்டது. சிதம்பரனார் அவர்களின் பெயரால் பல கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. வீர சிதம்பரனார் பெயர் வாழ்க.

முருகன் : சிலையில் என்ன எழுதி இருக்கிறது ?

செல்வி : ''கப்பலோட்டிய தமிழன்

வ. உ. சிதம்பரனார்
1872—1936

திறப்புவிழாத் தலைவர் :
மாண்புமிகு கே. ஏ. மதியழகன்''

என்று எழுதப்பட்டிருக்கின்றது. "திருவும் புகழும்'' என்று தொடங்கும் பாடலும் அதில் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

———

சீவானந்தம்

சீவானந்தம் அவர்களுடைய சிலை தண்டையார்ப்பேட்டை மணிக் கூண்டின் அண்மையில் கருணாநிதி பூங்காவில் வைக்கப்பட்டிருக்கின்றது.

மாமா : இவர் சிறந்த பேச்சாளர் உரைநடை எழுதுவதிலும் வல்லவர். கவிபாடும் திறமையுடையவர்.

முருகன் : எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

மாமா : முதலில் காந்தியடிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி இருந்தவர். 'தன் மான' இயக்கம் முதலியவற்றில் ஈடுபட்டார். பின்னர் 'பொதுவுடைமை'க் கட்சியில் மிகுந்த அக்கறை கொண்டார்.

1907 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் நாள் குமரி மாவட்டத்திலுள்ள பூதப்பாண்டி என்னும் ஊரில் பட்டன் பிள்ளை என்பவருக்கும் உமையம்மையாருக்கும் புதல்வராகத் தோன்றினர். உள்ளூரில் நடுத்தரப் பள்ளியில் கல்வி பயின்றார்.

பின்னர்ப் பொது நலப்பணியில் ஈடுபட்டார். இவருக்குத் தனித்தமிழ்ப் பற்று மிகுதியாக இருந்தது. மறைமலைஅடிகளைப் பின்பற்றித் தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

செல்வி : தமிழுக்காகவே வாழ்ந்து நமதருமைத் தமிழை வளர்த்த மறைமலைஅடிகளுக்கு ஏன் சிலை அமைக்கவில்லை?

மாமா: அடிகள் பிறந்த ஊராகிய நாகப்பட்டினத்தில் சிலை அமைத்திருக்கிறார்கள். சென்னையிலும் அடிகளுடைய சிலையை அமைப்பதற்கு ஏற்பாடு கள் செய்து வருகின்றனர்.

மறைமலை அடிகளின் பெயரில் 'நூல் நிலையம்' ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. பல்லாவரத்தில் அடிகளுடைய மாளிகை நினைவுச் சின்னமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றது

முருகன்: சீவானந்தம் சிறைக்குச் சென்றவரா?

மாமா: வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டதால் அடிக்கடி சிறை செய்யப்பட்டார். தொழிலாளர் முன்னேற்றத்திற்காக ஓயாது உழைத்தார். தம்முடைய அரசியல் வாழ்வில் ஏறத்தாழப் பத்தாண்டுகள் வரை சிறையில் கழித்திருக் கின்றார்.

பொதுவுடைமைக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு அதில் தீவிரமாகச் செயலாற்றினார். வெள்ளையர்கள் இவரை நாடு கடத்தியபோது சில காலம் புதுச்சேரியிலும் பம்பாயிலும் தங்கி இருந் தார். தமது கட்சியின் வளர்ச்சிக்காக 'ஜனசக்தி' என்ற இதழைத் தொடங்கிவைத்தார்.

'பாரதி வழி' 'ஜீவாவின் பாடல்கள்' முதலிய நூல்களை வெளியிட்டார். இவர் எப்பொழுது பார்த்தாலும் படித்துக் கொண்டும் எழுதிக் கொண் டும் இருப்பார். வீண்பொழுது போக்க மாட்டார்.

செல்வி: நானும் படித்துக் கொண்டே இருப் பேன். ஆனால் இவரைப் போல் எழுத முடியாது.

மாமா: இவர் பேசத் தொடங்கினால் நிலம் நடுங்கும். சிங்கம் போல் வீர முழக்கம் செய் வார். சொல் வன்மையுடையவர். நாட்டிற் காகவும் தமிழுக்காகவும் அல்லும் பகலும் உழைத்து 1963 ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் உலக வாழ்வைத் துறந்தார்.

இவருக்குச் சிலையமைத்தபோது காமராசர் தலைமை தாங்கி இவருடைய தொண்டினைப் பாராட்டினார்.

'பசி எடுக்கிறது. வீட்டிற்குப் போகலாம்' என்ருன் முருகன்.

சாப்பாட்டு நேரமும் வந்து விட்டது' என்ருள் செல்வி.

மாமா : திரு வி. கலியாண சுந்தரனர் சிலை ஒன்று இங்கே இருக்கின்றது. அதையும் பார்த்து விட்டுப் போகலாம். உங்களுக்குப் பசிநேரம் வந்துவிட்டது. கேட்டறியும் செல்வம் மற்றைச் செல்வங்களை விடச் சிறந்தது. கற்றறிந்தவர் களிடம் கேட்டறிய வேண்டும். கேள்விச் சுவையை உணராமல் வாயின் சுவையை மட்டும் எண்ணிக்கொண்டிருக்கக் கூடாது. நமது செவிக்குக் கேள்வியாகிய உணவை அளிக்கிருேம். அதற்குத் துணையாக உடலை வளர்ப்பதற்கு வயிற்றுக்கும் சிறிது உணவு கொடுக்கலாம். இதனைத் திருவள்ளுவர்,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" —குறள்

எனக் கூறுகின்ருர்.

சீவானந்தம் அவர்கள் கம்பன், பாரதி போன்ற கவிஞர்களிடம் மிகுந்த பற்றுடையவர். கவிஞர்களின் விழாக்களில் தவருமல் பங்குகொள்வார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிகளில் மிகவும் ஈடுபாடு உடையவர்.

———

திரு. வி. கலியாண சுந்தர முதலியார்

பிரம்பூரில் கருணாநிதி பூங்காவிற்குச் சென்று திரு. வி. க். அவர்களின் சிலையைப் பார்வையிட்டனர்.

முருகன் : இராயப்பேட்டையில் திரு வி. க. அவர்களின் பெயரில் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கு இன்னொரு சிலை இருக்கின்றது. அதையும் படம் பிடிக்கலாம். அதில் 'தமிழ்த்தென்றல்' என்று பொறிக்கப் பட்டிருக்கின்றது.

செல்வி : 'தமிழ்த்தென்றல்' என்ற பெயர் எப்படி வந்தது?

மாமா : இவருடைய உரைநடை தனிப்பட்ட முறையில் அமைந்து மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. இன்பத்தையும் அளித்தது. அதனால் ''தமிழ்த் தென்றல்'' என்று பாராட்டப்பெற்றார்.

இவர் 1883 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் நாள் சென்னைக்கு அண்மையிலுள்ள 'துள்ளம்' என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் பெயர் விருத்தாசல முதலியார். தாயார் பெயர் சின்னம்மாள். அவருடைய சொந்த ஊர் திருவாரூர். துள்ளம் என்ற ஊரில் தங்கியிருக்கும்போது கலியாணசுந்தரனார் பிறந்தார். திருவாரூரைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பதற்காகத் தம்முடைய பெயருக்கு முன்னால் திரு என்பதையும் சேர்த்திருந்தார்.

திரு. வி. க. அவர்கள் பள்ளிப் படிப்பில் முதன்மையாக விளங்கியதால் பள்ளி அதிகாரிகள் இவர் கட்டணமின்றிப் படிப்பதற்கு ஏற்பாடு செய்தனர்.

முருகன் : வீண்பொழுது போக்காமல் கருத்துடன் படித்துக்கொண்டிருப்பார்.

மாமா : இவர் நன்ருகப் படித்துத் தேர்ச்சியுற்ருர். யாழ்ப்பாணம் கதிர்வேற் பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்டார். இராயப் பேட்டை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். 1947 ஆம் ஆண்டில் 'தேசபக்தன்' என்ற இதழின் ஆசிரியரானர். பிறகு 'நவசக்தி' என்னும் இதழைத் தொடங்கி இருபது ஆண்டுகள் நடத்தினர்.

செல்வி : விடுதலைப்போரில் சேர்ந்தவரா ?

மாமா : விடுதலைப்போரில் ஊக்கங்கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தை முன்நின்று நடத்தினர். தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டார்.

முருகன் : எத்தனை நூல்கள் வெளியிட்டிருக்கிருர்?

மாமா : நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, இந்தியாவும் விடுதலையும், பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி, உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல், கடவுள் காட்சியும் தாயுமானரும் முதலிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்ருர்.

திரு வி. க. அவர்களின் வாழ்வு தமிழ் வாழ்வு. இவர் தமிழகத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. பல இடங்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். 'முருகன் அல்லது அழகு' என்னும் நூல் ஒன்று எழுதினர். அழகு என்னும் பெயர் அதற்கு முற்றும் பொருத்தமாக அமைந்துள்ளது.

பெண்ணின் பெருமை என்னும் நூல், பெண்மை, தாய்மை, இறைமை என்னும் முப்பொருள்களை முதன்மையாக வுடையது. 1943 ஆம் ஆண்டில் இவருடைய மணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவருடைய உடல் நலம் குன்றிக் கண்ணொளி மங்கி வந்தது. அப்பொழுது "இருளில் ஒளி"

என்னும் நூல் மலர்ந்தது. திரு வி. க. அவர்கள் 1953ஆம் ஆண்டு செப்டெம்பர் 17ஆம் நாள் இறை திருவடி சேர்ந்தார்.

அவ்வமயம் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தினர் செந்தமிழ்ச்செல்வியில் திரு வி.க. அவர்களின் நினைவுமலர் ஒன்று வெளியிட்டனர். தந்நலமற்ற தனிப் பெருந்தகையென்றும் முற்றும் துறந்த முனிவர் என்றும் அவரைப் புகழ்ந்து எழுதப் பெற்றது.

மாமா சிலைகளையெல்லாம் படம் பிடித்துக் கொண்டே வந்தார்.

முருகன் : படம் எதற்கு எடுக்கிறீர்கள் ?

மாமா : சிலைகளைப் பற்றிய நூல் ஒன்று வெளியிடலாம். படங்களையும் அதில் சேர்க்கலாம். வெளியூர்களில் இருப்பவர்கள் சிற்பங்களின் அழகைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். தலைவர்களின் கதைகளையும் படித்து இன்புறுவார்கள்.

செல்வி: மற்றைச் சிலைகளை மாலையில் பார்க்கலாமா?

மாமா : வீட்டிற்குப் போய்ச் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு மாலையில் வந்து பார்க்கலாம்.

முருகன் : திரு. வி. க. அவர்கள் வேறு என்ன நூல்கள் வெளியிட்டிருக்கிறார் ?

மாமா : 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் நூலில் தாய்நாட்டுப் பணியைப் பெரிதும் வலியுறுத்திப் போற்றுகின்றார். 'நாயன்மார் திறம்' என்ற நூலில் அன்பு, சமய மாண்பு, தொண்டின் சிறப்பு, உண்மை உறுதி, அஞ்சாமை, ஒழுக்கம், வீரம் முதலிய செம் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. 'சைவத் திறவு' என்னும் நூலில் கடவுள் உண்மை, இறைவனை உணரும் வழி முதலிய பொருள்கள் வந்துள்ளன. கண்ணொளி குன்றிப் படுக்கையில் கிடந்த காலத்தும் அவருடைய தமிழ்ப்பணி தொடர்ந்து நடைபெற்றது. இருமையும் ஒருமையும், அருகன் அருகே, பொருளும் அருளும், செத்துப் பிறத்தல் என்னும் நூல்கள் வெளி வந்தன. இவர் ஏழைகளுக்காகத் தொண்டு செய்து ஏழையாகவே வாழ்ந்தவர். இவருடைய புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

———

செங்கல்வராய நாயக்கர்

வேப்பேரிக்குச் சென்று தொழில்துறைப் பள்ளிக்கூடத்தி லிருக்கும் செங்கல்வராயர் சிலையைப் பார்த்தனர்.

முருகன் : இப்பள்ளியைக் கட்டிவைத்தவருக்கு முதலிடம் கொடுத்திருக் கிறார்கள்.

மாமா : இவர் ஒரு கொடைவள்ளல். 1829 ஆம் ஆண்டு பெருமாள் நாயக்கர் என்பவருக்கும், தெய்வயானை அம்மையாருக்கும் புதல்வ ராகத் தோன்றினர். தந்தையார் இராணுவத்தில் பணியாற்றி வந்தார்.

செங்கல்வராயர் வாணிபத்தில் தமக்குக் கிடைத்த பொருளை எல்லாம் அறநெறியில் செலவு செய்தார். வணிகர்களுக்கு ஒரு தலைவர் போல் விளங்கினர். இவர் எல்லோரிடத்திலும் அன்பு பாராட்டுவார். இறைவனிடத்தில் பேரன்பு பூண்டு ஒழுகி வந்தார். ஏழைகளிடம் இரக்கம் காட்டுவார். சாந்த் கம்பெனியின் தலைவராகிப் பெரும்பொருள் திரட்டினர்.

1857 ஆம் ஆண்டில் பஞ்சம் வந்தபோது இவருடைய வீடு அறச் சாலையாக மாறிவிட்டது. தமது பொருளை வாரி வாரி வழங்கினர்.

செல்வி: அதனால் மக்கள் இவரை வாழ்த்துகின்றார்கள்.

மாமா: நாள்தோறும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்று வழிபாடுகள் செய்வார். அங்கு ஒரு கட்டிடம் அமைத்துச் சமய நூல்களை வெளியிட்டார். வேதாந்த வித்தகர்களைக் கொண்டு மறைந்து கிடந்த நூல்களை வெளிக்குக் கொண்டுவந்தார். இவருடைய சொத்து முழுவதையும் அற நிலையங்களுக்கு எழுதிவைத்தார்.

முருகன்: அதனால்தான் இவரைப் பெரிய வள்ளல் என்று போற்றுகிறோம்.

மாமா: ஒரு தனிக்குழு ஏற்படுத்தி ஏழை மாணவர்களுக்குப் பண உதவி அளித்தார். பல கோவில்களில் கட்டளைகள் ஏற்படுத்தினார். காஞ்சிபுரத்திலும் உவரி என்ற இடத்திலும் இவருடைய அறச்சாலைகள் இருக்கின்றன. அனாதை விடுதிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் இவருடைய பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

பல அறங்களைப் புரிந்த நாயக்கர் அவர்கள் தமது 45 ஆம் அகவையில் விண்ணுலகெய்தினார். இவருடைய அறங்கள் பச்சையப்பரின் அறங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

'தருமம் தலைகாக்கும்' என்னுங் கொள்கையைக் கடைப்பிடித்து இவர் பல அறங்களைச் செய்தார். இவர் ஈத்துவக்கும் இன்பம் அறிந்தவர். பகுத்து உண்ணும் பழக்க முடையவர். இவருடைய சிலை திரு. காமராசர் அவர்களால் 1963 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.

———

பச்சையப்ப முதலியார்

பின்னர்ப் பூந்தமல்லிப் பாதையின் வழியாகச் சென்று பச்சையப்பர் கல்லூரியில் பச்சையப்ப முதலியாரின் சிலையைப் பார்த்தனர். இச்சிலை ஒரு குழந்தையிடம் அவர் அன்பு காட்டுவதுபோல் செய்யப் பட்டிருக்கின்றது.

முதலியார் அவர்கள் 1754 ஆம் ஆண்டு பெரியபாளையம் என்னும் ஊரில் விசுவநாத முதலியார் என்பவருடைய புதல்வராகத் தோன்றினர். தந்தையாரை இழந்து ரெட்டி ராயர் என்பவருடைய ஆதரவில் வளர்ந்து வந்தார். பிறகு சென்னைக்கு வந்து நாராயண பிள்ளை என்பவருடைய உதவியால் கல்வி பயின்றார்.

முருகன் : ஏழையாக இருந்தவர் எப்படிப் பெரிய செல்வரானர்?

மாமா : ஒரு பீங்கான் கடையில் தரகராக அமர்ந்தார். நாளடைவில் பெருஞ் செல்வரானர்.

செல்வி : எவ்வளவு செல்வம் சேர்த்தார் ?

மாமா : பத்து நூருயிரத்திற்கு மேல் சேர்ந்திருந்தது. தாம் ஈட்டிய பொருளை எல்லாம் நல்ல வழியில் செலவு செய்தார்.

முருகன் : பள்ளிக்கூடங்கள் கட்டினரா ?

மாமா: காசி முதல் இராமமேச்சுரம் வரையில் இவருடைய அறநிலையங்களைக் காணலாம். சென்னை, காஞ்சிபுரம், சிதம்பரம் முதலிய இடங்களில் இவருடைய உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் நடைபெற்றுவருகின்றன.

செல்வி: கல்வியைப் பரப்புவதற்கு மூலகாரணராக இருந்தவர் எனக் கூறலாம்.

மாமா: பச்சையப்பருடைய அறங்களில் கல்விச்சாலைகள் பல தோன்றியுள்ளன. பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பச்சையப்பரை வாழ்த்துகின்றனர்.

முருகன்: அறநிலையங்களை யார்பார்த்துக் கொள்கிறார்கள்?

மாமா: பச்சையப்பருடைய பொருளை அறஞ் செய்வதற்குக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவினர் பாதிப் பொருளைக் கல்விக்கும் மீதியை மற்றை அறங்கட்கும் செலவிடத் தொடங்கினர், திருக்கோவில்களில் பல அறக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன.

1794 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் பச்சையப்பர் திருவையாற்றில் இறைவனடி சேர்ந்தார். பச்சையப்பருடைய அறங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவரை என்றும் மறவாமல் பாராட்டவேண்டியது நமது கடமையாகும்.

சென்னையில் பச்சையப்பர் கல்லூரியும் பள்ளியும் ஒரே இடத்தில் இருந்தன. கல்லூரி மட்டும் சேத்துப் பட்டிற்கு மாற்றப்பட்டுவிட்டது. சென்னையிலும் காஞ்சிபுரத்திலும் பச்சையப்பர் கல்லூரிகளும் உயர்நிலைப்பள்ளிகளும் இருக்கின்றன. சிதம்பரத்திலும் இவருடைய பெயரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கின்றது.

லார்டு ரிப்பன்

மாலையில் மூவரும் ரிப்பன் கட்டிடத்திற்குச் சென்று லார்டு ரிப்பன் சிலையைப் பார்த்தனர்.

மாமா : இவர் இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக இருந்து ஆட்சி நடத்தியவர். 1827 முதல் 1852 வரை பல ஆண்டுகள் பாராளு மன்ற உறுப்பினராக இருந்தார். இந்திய அமைச்சராகவும் பணியாற்றினர்.

முருகன் : இவருடைய முழுப்பெயர் என்ன ?

மாமா : இவருடைய பெயர் 'ஜார்ஜ் பிரெடெரிக் சாமுவேல் ராபின்சன்'. 1871ஆம் ஆண்டில் 'ரிப்பன் மார்க்கிஸ்' என்னும் பட்டம் பெற்றுர்.

லார்டு ரிப்பன் மக்களுக்குப் பல நன்மைகள் செய்தார். செய்தித் தாள் சட்டத்தைத் தளர்த்திவிட்டார். கல்வி முன்னேற்றத்திற்குரிய வழி வகைகளை ஆராய்வதற்கு ஒரு தனிக்குழு ஏற்படுத்தினர். தொடக்கக் கல்வி முறையைச் சீர்திருத்தம் செய்தார். தொழிற் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்.

இவருடைய காலத்தில் நகராண்மைக் கழகங்கள் பல உரிமை களைப் பெற்றன. ரிப்பன் அவர்களின் நினைவுச் சின்னமாக ரிப்பன்

அச்சுக்கூடம் ஏற்பட்டது. இந்திய நாட்டு விடுதலைக்கு வித்திட்டவர்களில் இவரையும் ஒருவராகச் சேர்க்கலாம். ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுபடவேண்டுமென்று சில ஆட்சி முறைகளை மாற்றி அமைத்தார். 1884 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

செல்வி: ஒரு நல்ல மனிதர்; நாட்டைவிட்டுச் சென்றது இந்திய மக்களுக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்கி இருக்கும்.

மாமா: இவர் இங்கிலாந்துக்குச் சென்று அமைச்சர் குழுவில் பல பதவிகளை ஏற்று நடத்தினர். இந்திய மக்கள் இவரை மறவாது நன்றியுடன் எண்ணி வரலாயினர்.

முருகன்: சிலையில் எழுதி இருப்பதைப் படிக்கலாம்.

பிரெடெரிக் சாமுவேல் ரிப்பன் கே. ஜி.

(தோற்றம் 1827 — மறைவு 1909)

போர் செயலாளர் 1863—1866

இந்திய நாட்டு ஆங்கிலச் செயலாளர் 1866

சட்டமன்றத் தலைவர் 1868—1873

ஐக்கிய அமெரிக்காவின் ஆங்கில ஆணையர் 1871

அரசரின் உதவியாளர் 1880—1884

கப்பல்படைத் தலைவர் 1886

குடியேற்ற நாட்டுச் செயலாளர் 1892—1895

குதிரைப்படைத் தலைவர் 1873—1906

குதிரை ஏற்றக் குழுவின் தலைவர் 1873—1906

பல்கலைக் கழகத் துணைவேந்தர் 1904—1909

சிவஞான முதலியார்

இவருடைய சிலையும் ரிப்பன் கட்டிடத்தைச் சேர்ந்திருக்கின்றது. இவர் சென்னை நகராட்சியில் இருபது ஆண்டுகள் ஆணையராக இருந்தவர்.

செல்வி: எதுவரை படித்திருந்தார்?

மாமா: பி. ஏ., பி, எல். பட்டங்களைப் பெற்றவர். சென்னை மாநிலத்திலேயே சிறந்த மாணவரென்று தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றவர்.

முருகன்: நானும் இவரைப்போல் நன்ருகப் படித்து முதற் பரிசு பெறுவேன்.

மாமா: 1886 ஆம் ஆண்டில் வழக்கறிஞரானுர். 1902 ஆம் ஆண்டில் எட்வர்டு அரசரின் முடிசூட்டு விழாவின் போது இங்கிலாந்துக்குச் சென்ருர். ஜார்ஜ் இளவரசர் சென்னைக்கு வந்தபோது அவருக்குச் சிறந்த வரவேற்பளித்தார்.

முருகன்: பொதுப் பணிகளில் ஈடுபட்டிருந்தாரா?

மாமா: இவருடைய பணிகளைச் சொல்லட்டுமா? பச்சையப்பர் அறங்களின் பொறுப்பாளர், தொண்டை மண்டலம் உயர்

நிலைப் பள்ளியின் தலைவர், கீழ்நாட்டு உதவி சேமிப்பு நிதியின் தலைவர், இந்து சனோபகார சாஸ்வத நிதியின் தலைவர், கங்காதர ஈசுவரர் கோவிலின் பாதுகாப்பாளர்.

இவர் பொது மக்களுக்குத் தொண்டு செய்து புகழ் பெற்றவர். வறியவர்களுக்கு இல்லையென்னாது கொடுத்துப் புகழுடன் வாழ்ந்தவர். ஓங்கி நிற்கின்ற புகழ் அல்லாமல் உலகத்தில் அழியாமல் நிற்க வல்லது வேறொன்று மில்லை. அறிவிற் சிறந்து நின்று புகழுடம்பு பெற்றவர்.

இவர் மறைந்தாலும் இவருடைய தொண்டுகளை மறவாமல் 1924 ஆம் ஆண்டில் இவருக்கு அழகான சிலை அமைக்கப்பட்டது.

சிலையில் எழுதி இருப்பதைச் செல்வி படித்துப் பார்த்தாள் :

ராவ்பகதூர் P. M. சிவஞான முதலியார்
பி. ஏ., பி. எல்.

ஆணையர், நகரப் பேரவை
(1894 முதல் 1919 வரை)
1924 ஆம் ஆண்டில் நகரமக்களால்
இச்சிலை நிறுவப்பட்டது.

தியாகராயச் செட்டியார்

ரிப்பன் கட்டிடத்தில் மூன்றாவதாகத் தியாகராயச் செட்டியார் அவர்களின் சிலையைச் சுற்றிப் பார்த்தனர்.

மாமா : இவர் நீதிக்கட்சியை ஏற்படுத்தியவர். வகுப்புக்களின் ஏற்றத்தாழ்வு களைப் போக்குவதற்குப் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்னும் குறள் நெறியைப் பின்பற்றினர். நாட்டின் நலங்கள் யாவும் எல்லா வகுப் பினர்க்கும் பகிர்ந்தளிக்கப்பெற வேண்டுமென்று வற்புறுத்தினர்.

முருகன் : இவர் எந்த ஊரிலிருந்தார்?

மாமா : சென்னை வண்ணாரப்பேட்டையில் தோன்றியவர். பெரும் வணிகர். நாட்டுப்பற்றும் கடவுள்பற்றும் நன்கு அமையப் பெற்றுச் சிறப்புடன் விளங்கியவர். நாடு விடுதலையடைய வேண்டுமென்ற ஆர்வமுடையவர். எல்லா வகுப்பினரும் நன்னிலை பெறுதலே உண்மையான விடுதலை என்று நம்பியவர்.

செல்வி : நீதிக்கட்சியைப் பரப்புவதற்கு என்ன முயற்சிகள் செய்தார்?

மாமா : தாழ்ந்து உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பினர். 'திராவிடன்' என்னும் தமிழ் இதழையும், 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில இதழையும் நடத்தினர்.

இவருடைய முயற்சியின் பயனுக நீதிக்கட்சி பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்தது. ஒதுக்கப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் அவருடைய சலியாத உழைப்பினுல் மேன்மை யடைந்தனர். 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாள் உலக வாழ்வை நீத்தார். இத்தகைய பெரியாரைப் போற்ற வேண்டியது நமது கடமை யாகும்.

இவருடைய நினைவிற்கு அறிகுறியாகச் சென்னைப் பட்டினத்தின் ஒரு பகுதிக்குத் "தியாகராய நகர்" என்று பெயரிட்டு அழைக்கிருேம். தியாக ராயர் பெயரில் சென்னை வண்ணையம்பதியில் ஒரு கல்லூரியும், ஓர் உயர்நிலைப்பள்ளியும் நடை பெறுகின்றன.

செட்டியார் அவர்கள் பெருந்தன்மை யுடையவர். செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்து முடிக்க வல்லவர். இவர் மிகவும் பணிவுடன் நடந்து கொள்வார். இவருடைய உயர்ந்த நோக்கங்களை நாம் வியந்து பாராட்டுகின்ருேம்.

சத்தியமூர்த்தி

ரிப்பன் கட்டிடத்திற்கு முன்னால் உள்ள சிலைகளில் நான்காவது சிலை சத்திய மூர்த்தியின் சிலை.

முருகன்: இவர் நல்ல பேச்சாளர் என்று சொல்வார்கள்.

மாமா: சொற்பொழிவாற்றுவதில் புகழ்பெற்று விளங்கினார். உரிமைப்போரிலும் பொதுப்பணிகளிலும் ஈடுபட்டிருந்தார்.

இவர் தஞ்சை மாவட்டத்தில் திருப்பெருந்துறைக்கு அண்மையிலுள்ள செம்மனும் பொட்டல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை சுந்தர சாத்திரியார். தம்முடைய மனைவி சுப்புலட்சுமி அம்மாளுடன் திருமயத்தில் இருந்த போது 1887 ஆம் ஆண்டு ஆகஸ்டு 17 ஆம் நாள் சத்தியமூர்த்தி தோன்றினார். எட்டாம் வயதில் தந்தையை இழந்தார். அன்னையார் வீடு நிலங்களை விற்றுப் படிக்க வைத்தார்.

செல்வி: "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பார்கள்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே"

என்பதை உணர்ந்து அந்த அம்மாள் மகனைப் படிக்க வைத்திருக்கிறார்கள்.

மாமா: சத்தியமூர்த்தி மிகவும் நன்றாகப் படித்துத் தேர்ச்சியுற்றார். புதுக்கோட்டைக் கல்லூரி, சென்னை கிறித்துவக் கல்லூரி, சட்டக்கல்லூரி ஆகியவைகளில் கல்வி கற்றுப் பட்டம் பெற்றார்.

இரண்டு முறை இங்கிலாந்துக்குச் சென்று நாட்டு விடுதலைக்காக வாதாடினர். இலண்டனில் இவர் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டுமென்று காரசாரமாகப் பேசினர். அக்கூட்டத்திலிருந்த ஆங்கிலேயர் ஒருவர் "நாங்கள் வந்து விட்டால் அங்குக் கொள்ளையும் கொலையும் மலிந்து குழப்பமாகிவிடும்" என்றார். அதற்குச் சத்தியமூர்த்தி "உலகத்துக்கெல்லாம் காவலர்கள் ஆங்கிலேயர்கள் தாமா?" எனக் கேட்டு அவருடைய வாயை அடக்கினர்.

முருகன்: சரியான போடு போட்டார்.

"நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்"

என்று பாரதியார் பாடியுள்ளார்.

மாமா: சத்தியமூர்த்தி நாடெங்கும் சுற்றி விடுதலையின் நோக்கத்தைப்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினர். இவருடைய வீர மொழிகளைக் கேட்டு மக்கள் விழிப்படைந்தனர். உரிமைப் போரில் பலமுறை சிறை புகுந்தார்.

செல்வி: துணிச்சலுடைய தலைவர் என்று சொல்ல வேண்டும்.

மாமா: காங்கிரசின் தலைவராக இருந்து பல இயக்கங்களை நடத்தினர். பொதுப் பணிகளிலும் ஈடுபட்டார். ஊராளும் மன்ற உறுப்பினராகவும், பல்கலைக் கழக உறுப்பினராகவும் இருந்து தொண்டுகள் செய்தார். 1939 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்து மக்களுக்குப் பல நன்மைகள் புரிந்தார். குடிதண்ணீருக்கு வசதிகள் ஏற்படுத்தினர். சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். நாடகக் கலை வளர்ச்சிக்குத் தொண்டுகள் செய்தார்.

1943 ஆம் ஆண்டில் சிறையிலிருக்கும்போது நோய் பற்றியதால் இவரை அரசினர் விடுதலை செய்தனர். மார்ச்சு 28ஆம் நாள் உலக வாழ்வைத் துறந்தார்.

டாக்டர் அம்பேத்கார்



'மூர் மார்க்கெட்' என்னும் கடை வீதிக்குப் பின்னால் 'நேரு விளையாட்டு அரங்கின்' அண்மையில் அம்பேத்கார் அவர்களின் சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : "இந்திய அரசியல் அமைப்பின் சிற்பி" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

மாமா : தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காகப் போராடியவர் இவர். பம்பாய் மாநிலத்தில் 1891ஆம் ஆண்டில் தோன்றினார். பட்டப் படிப்பு முடிந்தவுடன் பரோடா மன்னரின் பொருளுதவியால் அமெரிக்காவிற்குச் சென்று படித்து டாக்டர் பட்டம் பெற்றார்.

செல்வி : இவர் எந்தத் துறைகளில் படித்துப் பட்டம் வாங்கினார் ?

மாமா : சட்டம், பொருளியல், அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் பட்டம் பெற்றுப் பேரறிஞராகத் திகழ்ந்தார். வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். தாழ்த்தப்பட்டவர்களின் நிலையைக் கண்டு இரங்கி அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றினார்.

முருகன் : இலண்டனுக்குச் சென்றிருக்கிறாரா ?

மாமா : இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களின் சார்பில் கலந்து கொண்டார். தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சட்டமன்றங்களில் தனி இடம் வேண்டுமென்று வாதாடினார்.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுப்பதற்கென்று அமைக்கப் பெற்ற குழுவில் தலைவராக இருந்து பணியாற்றினர். தமது பணியைச் சிறந்த முறையில் செய்து முடித்து 1949 ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் நிறைவேற்றிவைத்தார்.

செல்வி: இவர் அமைச்சராக இருந்தவரா?

மாமா: நாடு விடுதலையடைந்த பிறகு நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் சட்டத்துறை அமைச்சராகப் பதவி யேற்றார்.

முருகன்: டாக்டர் பட்டம் எப்பொழுது கிடைத்தது?

மாமா: 1952 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகம் இவருடைய தொண்டுகளைப் பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கியது.

இவர் சிறந்த கல்வியறிஞர். கல்லூரி முதல்வராக விளங்கியவர். கல்லூரி ஒன்றைத் தாமே நிறுவியவர். தமக்காகவே ஒரு நூல்நிலையத்தை உண்டாக்கி நூல்களை ஆழ்ந்து கற்றவர்.

செல்வி: ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூல் நிலையம் இருக்கவேண்டும்.

மாமா: மேல் நாடுகளில் அப்படித்தான் வைத்திருக்கிறார்கள். நாம் பின் தங்கியவர்களாக இருக்கிறோம். அம்பேத்கார் சமூகம், அரசியல் முதலியனபற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார்.

‘ மெய் வருத்தம் பாரார்
பசிநோக்கார் கண் துஞ்சார்
செவ்வி அருமையும் பாரார்
கருமமே கண்ணாயினர்’’

என்றபடி காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தவர்.

இவர் 1956 ஆம் ஆண்டில் டில்லி மாநகரில் காலமானர். இவர் நம்மைவிட்டுப் பிரிந்தாலும் நாம் இவரை மறவாமல் சிலையமைத்துப் போற்றுகின்றோம்.

டாக்டர் அரங்காச்சாரி

பொது மருத்துவமனையின் முன்புறம் டாக்டர் அரங்காச்சாரி அவர்களின் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.

முருகன்: மிகவும் அழகான சிலை. உயிருடன் நிற்பதுபோல் தோற்ற மளிக்கின்றது.

மாமா: இவர் அறுவை மருத்துவத்தில் வியக்கத்தக்க திறமையுடையவராக இருந்தார். தமது வாழ்நாள் முழுவதும் ஓய்வு ஒழிவில்லாமல் உழைத்தார்.

செல்வி: மருத்துவர்களுக்கு ஓய்வு கிடைக்காது. இரவும் பகலும் ஓயாது உழைப்பார்கள்.

மாமா; மருத்துவர் நோயாளியை அறுத்தாலும், ஊசியால் குத்தினாலும் அவரிடம் மாறாத அன்பு பாராட்டுகின்றோம்.

> ''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
> மாளாத காதலன்பு உடையார்தம் தன்மைபோல்''

என்று ஓர் அடியார் பாடுகின்றார்.

அரங்காச்சாரி அவர்கள் அறுவை மருத்துவத்தில் முதன்மை பெற்று விளங்கினார். இவர் மிகவும் நல்லவர். பணத்தைப் பெரிதாகக் கருதாமல் ஏழை எளியவர்களுக்கெல்லாம் இரங்கிய மனத்துடன் மருத்துவம் செய்தார்.

இவர் 1882 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் தோன்றியவர். மருத்துவர் எவரும் அடையாத பெரும் புகழை அடைந்தார். மற்றவர்களால் கை விடப்பட்ட கடுமையான நோய்களை இவர் போக்கினார். உடல்நலம் குன்றியபோதும் மக்களின் நலனைக் கருதித் தமது கடமையைச் செய்தார். பெரும்புகழுடன் வாழ்ந்து 1934 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

செல்வி: இச்சிலை எப்பொழுது நிறுவப்பட்டது?

மாமா: 1939 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் நாள் சென்னை ஆளுநர் எர்ஸ்க்கின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

"டாக்டர் அரங்காச்சாரி அவர்களுடைய அன்பு, ஈகை, இரக்கம், திறமை முதலிய பண்புகளைப் பாராட்டும் பொருட்டு இச்சிலை நாட்டப்பட்டது" என அதில் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

இவர் பிள்ளைப் பேற்று மருத்துவத்திலும் சிறந்து விளங்கினார். இரவில் எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் சலிப்பின்றி வீடுகட்குச் சென்று மருத்துவம் செய்வார். அயலூர்களில் உள்ள நோயாளிகளைப் பார்ப்பதற்கு வானவூர்தியில் பறந்து செல்வார். இவர் எல்லோரிடமும் மிகவும் அன்புடன் நடந்து கொள்வார். முகமலர்ச்சியுடன் வரவேற்று இன்சொல் வழங்குவார். தம்மாலான உதவிகளைச் செய்வார்.

டாக்டர் குருசாமி முதலியார்

மருத்துவக் கல்லூரியின் முன்பு டாக்டர் குருசாமி முதலியார் அவர்களின் சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

மாமா : மக்களுக்குச் செய்யும் தொண்டுகளில் மிகச் சிறந்தது மருத்துவத் தொண்டு. ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்து புகழ் பெற்றவர் டாக்டர் குருசாமி முதலியார். முருகப் பெருமானிடம் பேரன்பு பூண்டு ஒழுகியவர். காலையில் வழிபாடுகள் செய்துவிட்டு மருந்து கொடுப்பார். தீராத நோயெல்லாம் தீர்ந்துவிடும்.

முருகன் : ஆம். சிலையைப் பார்த்தால் அன்பும் அருளுமுடையவர் போல் தோற்றமளிக்கின்றார்.

மாமா : இவர் 1880ஆம் ஆண்டில் தோன்றியவர். மைசூரை அடுத்த சீரங்கப் பட்டணத்தில் இளமைக்கல்வியை முடித்தார். பெங்களூரில் பி. ஏ. பட்டமும் சென்னையில் மருத்துவப் பட்டமும் பெற்றார். படிப்பில் பலநிலைகளிலும் முதல்வராகத் திகழ்ந்து பரிசுகள் பெற்றார்.

செல்வி : நானும் நன்றாகப் படித்து அவரைப்போல் முதற் பரிசு வாங்கப் போகிறேன்.

மாமா : முதலியார் அவர்கள் அறுவை மருத்துவத்தில் தங்கப்பதக்கம் பரிசு பெற்றார். மைசூர் அரசாங்க மருத்துவத் துறையில் ஓராண்டுக் காலம் பணியாற்றினார். தஞ்சை மருத்துவக் கல்லூரியில் ஐந்து ஆண்டுகள்

விரிவுரையாளராக இருந்தார். 1917ஆம் ஆண்டில் சென்னை மருத்துவ மனையில் பொறுப் பேற்று ஆங்கிலேயருக்காக ஒதுக்கப் பட்ட பேராசிரியர் பதவியில் முதல் இந்திய ராக அமர்ந்தார்.

முருகன் : மேற்படிப்பில் தமது திறமையைக் காட்டி உயர்ந்த பட்டங்களையும் பெற்றுள் ளார்.

மாமா : அதனால்தான் உயர்ந்த பதவி கிடைத் தது. மேலை நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மருத்துவ முறைகளை ஆராய்ந்தறிந்தார். நீண்டநாள் சேவை செய்து 1937ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றார். பிறகு நாட்டு மருத்துவக் கல்லூரியின் இயக்குநராகப் பணியாற்றினார்.

மருத்துவத் துறையிலும் கல்வித்துறையிலும் நல்லசேவை செய்துள்ளார்.

செல்வி : கல்வித்துறையில் எப்படிப் பணி யாற்றினர்?

மாமா : தொண்டைமண்டலத் துளுவவேளாளர் உயர்நிலைப்பள்ளியின் ஆட்சியாளராகப் பணி புரிந்தார். முதலியார் அவர்களின் தொண்டு களைப் பாராட்டி அவருடைய பெயரில் மற்றோர் உயர்நிலைப்பள்ளி தொடங்கப்பட்டது. கீழ்ப் பாக்கம் மருத்துவமனையில் ஒரு கட்டிடத்திற்கு இவருடைய பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது.

இறுதி மூச்சுவரையில் மக்களுக்குச் சேவை செய்து 1958ஆம் ஆண்டு இறைவன் திருவடி சேர்ந்தார். அவருடைய சிலையில்

"புகழ் பெற்ற மருத்துவர்
ஏழைகளின் நண்பர்"

எனப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

சர் தாமஸ் மன்றோ

'ஐலண்டு மைதானம்' என்னும் தீவுத்திடலில் அழகான குதிரைமேல் வீற்றிருப்பவர் சர் தாமஸ் மன்றோ.

முருகன்: நல்ல வேளையாக அதை உடைக்காமல் வைத்திருக்கிறார்கள்.

செல்வி: வெள்ளைக்காரரின் சிலைகளை உடைத்து விடுவார்கள் அல்லது பொருட்காட்சிச்சாலைக்குக் கொண்டு போவார்கள்.

முருகன்: இது மிகவும் அழகான சிலை. இதை உடைக்க மனம் வராது.

மாமா: இவர் ஏழு ஆண்டுகள்வரை சென்னை ஆளுநராக இருந்தவர். 'கல்விக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவிடலாம்' எனக் கூறியவர். இச் சிலையை வைத்து நாம் போற்றவேண்டும். சர் தாமஸ் நமக்குப் பல நன்மைகள் செய்துள்ளார். அரசாங்கப் பணித்துறைகளில் இந்தியர்களை அமர்த்த வேண்டுமென்று ஆங்கில அரசினரிடம் வற்புறுத்தினர்.

இவர் 1761 ஆம் ஆண்டில் கிளாஸ்கோ நகரில் பிறந்தார். கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று கணிதத்திலும் இரசாயனத்திலும் தேர்ச்சி பெற்றார். இரசாயன நூல்களையும் இலக்கியங்களையும் விரும்பிக் கற்றார். 1780 ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்து பல மாவட்டங்களில் ஆட்சியாளராக வேலை பார்த்தார். போர் வீரராகவும் பணியாற்றினார்.

அறிவுக் கூர்மை, கற்பனைத் திறன், அன்பு, அடக்கம், உண்மை, நேர்மை, ஆட்சித் திறன், அரசியல் வல்லமை முதலிய நற்பண்புகள் இவரிடம் சிறந்து விளங்கின.

இந்தியர்கள் உரிமைபெற்று வாழவேண்டுமென்று விரும்பினார். இந்தியர்க்கு அதற்கேற்ற பயிற்சியையும் அளித்தார். தகுந்த காலம் வரும்போது நாட்டை இந்தியர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று கூறினார்.

செல்வி : வெள்ளையராக இருந்தாலும் நல்லவராக நடந்து கொண்டிருக்கிறார்.

மாமா : அதனால்தான் நாம் இவரைப் போற்றுகிறோம். 1827 ஆம் ஆண்டில் சர் தாமஸ் கர்நூல் மாவட்டத்தில் காலமானார். இச்சிலை 1839 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

காமராசர்

காமராசரின் சிலை தீவுத்திடல் (ஐலண்ட் கிரவுண்ட்) என்னும் மைதானத்திற்கு அண்மையில் நிறுவப்பட்டிருக்கின்றது.

முருகன்: ஏழைபங்காளர். கல்வியை இலவசமாக அளித்து ஏழை மக்களுக்குக் கல்வி புகட்டியவர்.

செல்வி: காங்கிரசுக்கே அல்லும் பகலும் உழைப்பவர்.

மாமா: விருதுநகரில் 1903 ஆம் ஆண்டு சூலை 15 ஆம் நாள் குமாரசாமி என்பவருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் புதல்வராகத் தோன்றினர்.

முதற்படிவத்தோடு படிப்பை நிறுத்திக்கொண்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார். திருமணம் செய்துகொண்டால் தமது பணி தடைப்படுமென்று திருமணம் செய்துகொள்ளாமலே இருந்துவிட்டார். 1936 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டுக் காங்கிரசின் செயலாளராகப் பணி யாற்றி 1940ஆம் ஆண்டில் அதன் தலைவரானர். ஒத்துழையாமை இயக்கத்தில் பன்முறை சிறைக்குச் சென்ருர்.

செல்வி: எப்பொழுது முதலமைச்சரானர்?

மாமா: 1954ஆம் ஆண்டில் தமிழக முதலமைச்சர் பதவியேற்று ஏழு ஆண்டுகள் வரை ஆட்சியைத் திறமையுடன் நடத்திவந்தார்.

தலைவர்கள் எல்லாம் கட்சிப் பணிசெய்ய வேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டு கட்சிக்காக உழைத்தார். காங்கிரசின் முன்னேற்றத்திற்கும் நாட்டு மக்களின் நன்மைக்கும் இவர் ஆற்றிய பணிகள் பல.

முருகன் : காமராசரின் சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டது.

மாமா : இதன் உயரம் $7\frac{1}{2}$அடி. வேங்கடேசன் என்னும் சிற்பியால் செய்யப்பட்டது. 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 9 ஆம் நாள் இந்திய நாட்டின் தலைமை அமைச்சர் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நேரு அவர்கள் காமராசரைப் பாராட்டிப் பேசுகையில் "உயிருடன் இருப்பவர்களுக்குச் சிலை எழுப்பக்கூடாது என்பது எனது கொள்கை. ஆயினும் சிறந்த தலைவர்களுக்கு மதிப்புக் காட்டவேண்டியது கடமையாகும். என் அருமை நண்பர் காமராசரின் பொருட்டு இந்தச் சிலையைத் திறந்து வைக்க முன்வந்துள்ளேன். இவர் மக்களால் விரும்பப்படும் உண்மையான தலைவர். திறமையும், நம்பிக்கையும் கடமையுணர்ச்சியும் கொண்டவர். இவர் நீடூழி வாழ்ந்து நல்ல தொண்டுகளைச் செய்து வரவேண்டும்" என வாழ்த்தினர்.

இவர் அனைத்திந்தியக் காங்கிரசின் தலைவராகவும் பணியாற்றிப் புகழ்பெற்று இப்போது பாராளுமன்ற உறுப்பினராக அமர்ந்துள்ளார்.

———

ஏழாம் எட்வர்டு

இராஜாஜி மண்டபத்திற்குப் போகும் வழியில் எட்வர்டு அரசரின் சிலையைப் பார்த்தனர்.

மாமா : எட்வர்டு அரசர் விக்டோரியா அரசியின் மூத்த புதல்வர். 1841ஆம் ஆண்டில் பிறந்தவர்.

முருகன் : எப்பொழுது அரசரானர்?

மாமா : விக்டோரியா இறந்தபின் 1901ஆம் ஆண்டில் அரசரானர்.

செல்வி : படித்துத் தேர்ச்சி பெற்றவரா?

மாமா : ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் எடின்பரோ முதலிய கல்லூரிகளில் படித்தவர். குடியேற்ற நாடுகளுக்கு முதன்முதலாகச் சென்ற இளவரசர் இவர்தாம்.

கலைவளர்ச்சியில் மிகுந்த ஆர்வமுடையவர். இசைக்கல்லூரி ஒன்றை நிறுவினர். விளையாட்டுப் போட்டிகளிலும், குதிரைப் பந்தயங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார்.

இவருக்குப்பின் 1910ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்டத்திற்கு வந்தார். இவரது சிலை கிருஷ்ணதாஸ் என்பவரால் சென்னைக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. 1863ஆம் ஆண்டில் ஆந்தில் என்ற ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

லார்டு போதாம்

குழந்தைகள் நேப்பியர் பூங்காவிற்குச் சென்று லார்டு போதாம் சிலையைப் பார்த்தனர். ஆங்கிலத்தில் எழுதியிருப்பதை முருகன் படித்தான்.

செல்வி: சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் என்றும் பொது நன்மைக்காகப் பாடுபட்டவர் என்றும் பொறித்திருக்கின்றது.

முருகன்: 1911ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் நாள் சென்னை ஆளுநர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதென எழுதி இருக்கின்றது.

மாமா: இவர் பன்னிரண்டு ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் பணியாற்றினர். 1908ஆம் ஆண்டு ஓய்வு பெற்று இங்கிலாந்துக்குப் போகும் வழியில் இறந்துவிட்டார்.

முருகன்: நேற்று இருந்தவர் இன்று இல்லை என்பது சரியாகி விட்டது.

மாமா: உயிர்ப் பிராணிகளுக்குத் துன்பம் செய்யக்கூடாது என்பதற்கு இவர் ஒரு கழகம் ஏற்படுத்தி இருந்தார். மற்ற உயிரின் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதிக் காப்பாற்ற வேண்டும் என்றார்.

''அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்ருக் கடை'' —குறள்.

இவர் மிகவும் நல்லவர், நேர்மையுடையவர். தென்னிந்திய உடற்பயிற்சிக் கழகத்தில் உறுப்பினராக இருந்தார். தமது கடமையிலேயே கண்ணும் கருத்து மாக இருந்தார். இவர் செய்த நன்மைகளை நாம் என்றும் மறக்கக்கூடாது.

அறிஞர் அண்ணுதுரை

கடற்கரையில் கண்ட திருவள்ளுவரை மீண்டும் மயிலாப்பூரில் கண்டு களித்தனர். சமஸ்கிருதக் கல்லூரிக்கு அண்மையில் அழகாக அமர்ந்திருந்தார். அங்கிருந்து மலைச்சாலைக்குச் சென்றனர். நான்கு பாதைகள் சந்திக்கு மிடத்தில் அறிஞர் அண்ணுவின் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.

முருகன் : அறிஞர் அண்ணு வாழ்க!

மாமா : இவர் இறந்தும் இறவாதவர். மக்கள் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றுவிட்டார்.

இவர் காஞ்சிபுரத்தில் 1908 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் நாள் நடராசன் என்பவருக்கும் பங்காரு அம்மையாருக்கும் அருமைப் புதல்வராகத் தோன்றினர். அரசியல், பொருளியல், வரலாறு, ஆகிய பாடங்களைப் படித்து 1934 ஆம் ஆண்டு பி. ஏ. ஆனர்சு பட்டம் பெற்ருர்.

செல்வி : ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசுவார்.

மாமா : ''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்''

என்பதற்கிணங்கச் சொல் வன்மையுடன் பேசுவார். விக்கிரமாதித்தன் கதை முதல் திருக்குறள் வரை எல்லா நூல்களையும் படித்துத் தம்முடைய அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

பள்ளியில் படிக்கும் காலத்திலேயே பொது நலத் தொண்டில் ஈடுபட்டார். தீண்டாமையை ஒழித்தல், கலப்பு மணங்களை ஆதரித்தல், தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துதல் முதலிய பணிகளைச் செய்து வந்தார்.

முருகன்: இவர் ஏன் திராவிடக் கழகத்திலிருந்து விலகி விட்டார்.

மாமா: ஈ. வே. இராமசாமிப் பெரியாருக்கும் இவருக்கும் சில கருத்து வேற்றுமைகள் தோன்றின. அதனால் திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து முன்னேற்றக் கழகத்தை அமைத்தார். இவர் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர். திராவிட முன்னேற்றக் கழகம் நாளடைவில் வளர்ச்சியுற்று மாநில ஆட்சியைக் கைப் பற்றியது. 1967 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா முதலமைச்சரானார்.

செல்வி: தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவி செய்தார்.

மாமா: பொது மறையாகிய திருக்குறளை உலக மெங்கணும் பரப்பினார். இவர் அமெரிக்காவிற்குச் சென்றபோது கூடத் திருக்குறளை எடுத்துச்சென்று அமெரிக்க மாணவர்களிடம் அதன் அருமையை விளக்கிக் காட்டினார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலிருந்து திருக்குறளின் அழகிய பதிப்புகளை அமெரிக்காவிற்கு எடுத்துச் சென்றார்.

இவரது ஆட்சியில் தமிழ்ப்புலவர்களின் சிலைகள் சென்னைக் கடற்கரையில் அமைக்கப்பட்டன.

முருகன்: அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டைச் சென்னையில் மிகவும் சிறப்பாக நடத்திவைத்தார்.

மாமா: இவரது புகழ் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரவிவிட்டது. தமது கொள்கைக்காகப் போரிட்டுப் பன்முறை சிறை சென்றார்.

செல்வி: அண்ணாநகர் எங்கே இருக்கிறது?

மாமா: அமைந்தகரைக்கு அண்மையில் இருக்கிறது. அங்கே மணிவிழா நினைவுச்சிலை இருக்கிறது. அதையும் பார்க்கலாம். அவர் வற்புறுத்

திக் கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னுஞ் சொற்கள் சிலையின் அடியில் பொறிக்கப்பட்டுள்ளன.

மற்றொரு சிலை கிண்டியில் இருக்கின்றது. அண்ணாவிற்கு எங்கே சென்றாலும் நல்ல வரவேற்புக் கிடைத்தது. இவர் மறைந்து விட்டாலும் இவருடைய புகழ் மறையவில்லை. இவருக்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் பதவியேற்று அண்ணா காட்டிய வழிகளையே கடைப் பிடித்து ஆட்சி நடத்திவருகின்றார். சென்னைச் சட்டக் கல்லூரி உள் முற்றத்திலும் அரசினர் வள மனையிலுள்ள சீரணி அலுவலகத்தின் முன்னும் அண்ணாவின் மார்பளவுச் சிலைகள் உள்ளன.

அறிஞர் அண்ணாவின் நினைவுச்சின்னங்கள் தமிழ் நாடெங்கும் பரவியுள்ளன. சென்னைக் கடற் கரையில் அறிஞர் அண்ணாவின் சமாதி கட்டப்பட்டிருக்கின்றது. அவருடைய உடலை அடக்கம் செய்த போது எங்கும் கண்டிராத பெருங்கூட்டம் கூடிற்று.

அண்மையில் கூவம் ஆற்றுப் பாலத்திலிருந்து சைதாப்பேட்டை மர்மலாங் பாலம் வரையுள்ள மலைச் சாலையின் பெயரை நகரப் பேரவையினர் 'அண்ணா சாலை' என மாற்றியமைத்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் நூல் வெளியீட்டுத் தொண்டைப் பாராட்டித் தாமரைச்செல்வர் (பத்மஸ்ரீ) என்னும் பட்டத்தை 1969 குடியரசு நாளில் வழங்குமாறு மத்திய அரசிடம் பரிந்துரைத்தார். அண்ணா அவர்களுடைய பேச்சிலும் மூச்சிலும் தமிழ் மணம் கமழும். தமிழுக்கு அவர் செய்த சிறப்பினை நாம் என்றும் மறக்க முடியாது.

அறிஞர் அண்ணா வாழ்க!

சிதம்பரம் செட்டியார்



மலேச்சாலேயில் 'இண்டியன் ஓவர்சீஸ் வங்கி'யின் முன்னல் சிதம்பரம் செட்டியார் அவர்களின் சிலே வைக்கப்பட்டிருக்கின்றது

முருகன் : செட்டி நாட்டு அரசர் பரம்பரையில் வந்தவர். இளவரசரைப் போல் தோற்றமளிக்கிருர்.

மாமா: 1908ஆம் ஆண்டு ஆகஸ்டில் மு. சித. முத்தையா செட்டியார் அவர்களுக்குப் புதல்வராகப் பிறந்தார். கிறித்துவக் கல்லூரியில் படித்துத் தேறினர்.

செல்வி: எத்தனேயோ அறநிலேயங்களில் பொறுப்பேற்று நடத்தி இருக்கிருர்.

முருகன் : மாமா, அவர் என்னென்ன பணிகளேச் செய்திருக்கிருர்?

மாமா : சட்டமன்ற மேலவை உறுப்பினர், இந்தியப் பணப் பாதுகாப்புக் கழகத்தின் இயக்குநர், 'இண்டியன் ஓவர்சீஸ் வங்கி'யின் இயக்குநர், மைசூர் காகிதத் தொழிற்சாலேயின் இயக்குநர், மைசூர் இரசாயனத் தொழிற்சாலேயின் இயக்குநர், பம்பாய் போதார் தொழிற்சாலேயின் இயக்குநர், முத்தையா செட்டியார் ஆடவர், மகளிர் உயர்நிலேப் பள்ளிகளின் தலேவர், திருவல்லிக் கேணி இந்து உயர்நிலேப்பள்ளியின் உறுப்பினர்.

முருகன் : பொருளாதார முன்னேற்றத்திற்கு ஓயாது உழைத்தவர்.

மாமா : இந்தியாவில் மிகப் பெரிய கட்டிடமாகிய எல். ஐ. சி. கட்டிடம் அமைக்கத் திட்டமிட்டவர் இவரே. அறம் வளர்த்த திருமிகு செட்டியார் அவர்களே மறவாது போற்றுகின்ருேம்.

என். எஸ். கிருஷ்ணன்

தியாகராய நகரில் வாணிமகாலுக்கு அண்மையில் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுடைய சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

செல்வி : அதில் "நகைச்சுவை மன்னர்" என்னும் 'கலைவாணர்" எனப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஊர்வலக் குழுவினரால் இச்சிலை நிறுவப்பட்டது.

மாமா : பாட்டோடு பண்ணையும் குழைத்து, நடிப்போடு நயத்தையும் இணைத்து, கலையோடு கவிதையும் கலந்து அனைவர்க்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தவர் கலைவாணர். கலை எங்கிருப்பினும் அதனைக் கண்டெடுத்து அதற்கு மதிப் பளித்தவர்.

செல்வி : இவர் நன்றாக நடிப்பார்; நகைப்பு ஊட்டுவார்.

மாமா : கலைவாணர் நாகர்கோவிலைச் சேர்ந்த ஒழுகினசேரியில் சுடலை முத்துப் பிள்ளைக்கும் இசக்கி அம்மாளுக்கும் மூத்தமகனாகப் பிறந்தார். தமிழும் மலையாளமும் நான்காம் வகுப்புவரை பயின்றார்.

இளம் வயதிலேயே ஒரு நாடகக் குழுவில் சேர்ந்து நடித்து வந்தார். நகைச் சுவையுடன் பேசுவார். இனிமையாகப் பாடுவார். எதையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலுடையவர். மதுரம் என்ற பெண்மணியைக் காதல் திருமணம்

செய்துகொண்டு அவருடன் சேர்ந்து நடித்து வந்தார். "சிரித்தால் நோய்தீரும். குலுங்கக் குலுங்கச் சிரிக்க வேண்டும். மனமாரச் சிரிக்க வேண்டும்" எனக் கூறித் தாமும் சிரித்துக் கொண்டே வாழ்ந்து காட்டினர்.

காந்தி அடிகளிடம் அன்புகொண்டு நாகர் கோவிலில் பத்தாயிரம் ரூபாய் செலவில் காந்தி நினைவுத்தூண் ஒன்று செய்து வைத்தார். அதில் காந்தி அடிகளின் அறிவுரைகளைப் பொறித்து வைத்தார்.

இவர் பெரும்பாலும் குற்றாலத்தில் தங்கி இருப்பார். அருவியில் இன்பமாகக் குளித்துக் கொண்டு புதுமையான கற்பனை வெள்ளத்தில் திளைத் திருப்பார்.

முருகன் : கன்னியாகுமரிக்குப் போகும்போது குற்றாலநாதரையும், திருச்செந்தூர் முருகப் பெருமானையும் வழிபடலாம்.

மாமா : கலைவாணர் நமது சமூகத்திலுள்ள ஊழல்களை யார் மனமும் புண்படாமல் நகைச்சுவையுடன் பாடிக்காட்டுவார். இவருடைய ஆதரவு பெற்றவர்கள் இப்பொழுது பெரிய நடிகர்களாக விளங்குகின்றனர். சென்னை "நடராசர் கல்விக்கழகத்தினர்" இவருக்குக் "கலைவாணர்" என்னும் பட்டத்தைச் சூட்டினர்.

மழையைக் கண்டால் இவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படும். மழையில் நனைந்து கொண்டே மழையின் சிறப்பைப்பற்றிப் பேசுவார். "மழையினால் உலகம் வாழ்ந்து வருகின்றது. நமக்கு வேண்டும் போது மழை கிடைக்குமா ? மழை வரும்போது அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்பார்.

தொழில் மேதை G. D. நாயுடு, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, இராமசாமிப் பெரியார் முதலியவர்களிடம் தொடர்பு வைத்திருந்தார். கலைவாணர் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவாக இருப்பார். தி. மு. க என்பதை "திருக்குறள் முன்னேற்றக் கழகம்" என்று விளக்கம் கொடுப்பார்.

1944 ஆண்டில் இந்துநேசன் ஆசிரியர் இலக்குமிகாந்தம் கொலைசெய்யப்பட்டபோது நடிகர்

தியாகராசபாகவதருடன் கிருஷ்ணனையும் இயக்குநர் ஸ்ரீராமுலு நாயுடுவையும் இன்னும் சிலரையும் சேர்த்துத் தொடுத்த வழக்கில் கிருஷ்ணன் மலர்ந்த முகத்துடன் சிறைக்குச் சென்றார். குற்றம் மெய்ப்பிக்கப் படவில்லை என்று இலண்டன் பாராளு மன்றத்தினரால் விடுதலைசெய்யப்பட்டார்.

சிறையிலிருக்கும்போது பாகவதருடன் வேடிக்கையாகப் பேசுவார். "என்ன பாகவதரே படப்பிடிப்பிற்காக உம்மைப் பலபேர் தேடுகிறார்கள். உமது கச்சேரியைக் கேட்கவேண்டு மென்று ஒரு மணமகன் காத்துக் கொண்டிருக்கிறான். அழைத்துப் போகலாம் என்று வந்தால் கதவை இழுத்துப்பூட்டி விட்டார்களே" என்றார். "உமக்கு எப்பொழுதும் விளையாட்டுத்தானா" என்றார் பாகவதர்.

கலைவாணர் ஏழைகளுக்குத் தம்மாலான உதவி செய்வார்.

முருகன் : இவர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக் கின்றாரா?

மாமா : ஒருமுறை இந்தியக் கலைஞர் குழுவுடன் ரஷ்யாவுக்குச் சென்றார். கடைக்குச் சென்று முட்டை வேண்டுமென்று கேட்டார். கடைக்கார னுக்குத் தமிழ் தெரியவில்லை. படம் வரைந்து காட்டினார். உடனே கடைக்காரன் புரிந்து கொண்டு முட்டையை எடுத்துக்கொடுத்தான்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மிகச் சிறிய அளவிலுள்ள 'திருக்குறளை'ப் 'பணம்' என்ற படத்தில் கையிலேந்தி இதோ பாருங்கள் 'என் கையில் உலகம்' என்றார்.

1957 ஆம் ஆண்டில் கலைவாணருக்கு வயிற்று வலி ஏற்பட்டு மருத்துவமனைக்குச் சென்றார். இவரைக் காணவந்த நண்பர்கள் ஏராளமான பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தனர். "காக்கை கரவா கரைந்துண்ணும்" என்றபடி அவைகளை மற்ற நோயாளிகளுடன் பகிர்ந்து உண்டார். நாடகத் துறையில் சிறந்த பணிகள் புரிந்து 1957 ஆகஸ்ட் 30 ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

பனகல் அரசர்

பனகல் பூங்காவில் பனகல் அரசரின் சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

முருகன் : சிலையின் பெயர் ஏன் தெலுங்கில் எழுதப்பட்டிருக்கிறது?

மாமா : இவர் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர். குண்டூர் மாவட்டத்தில் பனகல் என்னும் ஊரில் தோன்றியவர். ஆந்திர நாடு சென்னையிலிருந்து பிரிவதற்கு முன்னால் இச்சிலை நிறுவப்பட்டது. ஆந்திரர்கள் தமது தாய்மொழியாகிய தெலுங்கிலேயே எழுதிவைத்திருக்கின்றனர்.

செல்வி : நமது அருமைத் தமிழ்மொழியில் நமக்குப் பற்று இருப்பதுபோல் அவர்களுடைய தாய் மொழியில் அவர்களுக்குப் பற்று இருக்கின்றது.

முருகன் : ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிவைத்திருந்தால் எல்லோருக்கும் பயன்படும்.

மாமா : தமிழன்னையின் வயிற்றிலிருந்து உதித்தது தெலுங்கு. "கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன் உதரத்து உதித் தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்'' என மனோன்மணிய நாடகத்தின் தமிழ்த்தாய் வாழ்த்தில் கூறப்பட்டிருக்கின்றது. தெலுங்கில் எழுதினால் தவறில்லை.

பனகல் அரசரின் முழுப்பெயர் இராமராய நிங்கர். இவர் 1866 ஆம் ஆண்டு சூலை 9ஆம் நாள் காளஹஸ்தி (காளத்தி)யில் தோன்றினார். இவருடைய முன்னோர்கள் பனகல் என்னும் ஊரிலிருந்து வந்தவர்கள். வீட்டிலேயே

தெலுங்கும் வடமொழியும் பயின்றார். வால்மீகி இராமாயணமும் பகவத்கீதையும் மனப்பாடம் செய்திருந்தார்.

முருகன் : ஆங்கிலம் படிக்க வில்லையா ?

மாமா : திருவல்லிக்கேணி உயர்நிலைப்பள்ளியில் படித்தார். பிறகு மாநிலக் கல்லூரியில் சேர்ந்து 1892 ஆம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றார். தெலுங்கில் எம். ஏ. பட்டமும் வாங்கினார்.

பல்கலைக்கழகத்தின் உறுப்பினராகவும், திராவிட மொழிக் கல்விக் கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினார். தில்லி மேல்சபையில் திறமையுடன் செயலாற்றிக் கல்வித்துறையிலும், உழவுத்துறையிலும் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். 1915 ஆம் ஆண்டில் ஆந்திரப் பேரவையின் தலைவரானார்.

முருகன் : நீதிக்கட்சியில் சேர்ந்தவரா ?

மாமா : தியாகராயச் செட்டியார், தி. எம். நாயர் இவர்களுடன் தொடர்புகொண்டு நீதிக்கட்சியில் பணியாற்றினார். அனைவர்க்கும் சமஉரிமை அளிக்க வேண்டுமென்று முழக்கம் செய்தார். 1919ஆம் ஆண்டில் இலண்டனுக்குச் சென்று பாராளும் மன்றத்தில் வாதாடினார்.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது முதலமைச்சரானார். இந்துசமயப் பரிபாலனச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார் இந்திய மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தினார். இவர் உண்மையும் நேர்மையும் உடையவர். மக்களுக்காக ஓயாது உழைத்து 1928 ஆம் ஆண்டு திசம்பர் 15 ஆம் நாள் உலக வாழ்வை நீத்தார்.

சென்னையிலுள்ள சிலைகள் எல்லாவற்றையுமே பார்த்து முடித்து விட்டோம். புலவர்களுடைய வரலாறுகளையும், தலைவர்களுடைய பெருமைகளையும் அறிந்து கொண்டோம். சிற்பக்கலை மிகவும் அருமையானது. மறுமுறை சென்னையிலுள்ள கோவில்களிலே உள்ள சிற்பங்களைப் பார்க்கலாம்.

சென்னைச் சிலைகளின் கதை

சென்னைச் சிலைகளின் கதை

சென்னைச் சிலைகளின் கதை